பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 13 | வியாழக்கிழமை | 30.03.2023 | கதிர் 141

## எரிபொருள் விநியோகத்தர்களுக்கு இழப்பீட்டில் பங்கு வழங்கப்படும்

### அமைச்சர் கஞ்சன



விலை குறைப்பு தினமன்று எரிபொருளை கொள்வனவு செய்த எரிபொருள் விநியோகத்தர்களுக்கு இம்முறை ஒருநாள் இழப்பீட்டில் பங்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

எரிபொருட்களில் விலைகள் அதிகரிக்கும் என்ற அடிப்படையில் விநியோகத்தர்கள் அதனை கொள்வனவு செய்வதை காலம் தாழ்த்தினார்கள்.

இந்த நிலையில்தான் புதன் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளை குறைத்தோம். எனினும், இன்றைய ☞ 2

## எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியது

### தனியார் பௌசர் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

எரிபொருள் விநியோகம் வழமைக்குதிரும்பியுள்ளதாக தனியார் பௌசர் உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.

நுகேகொடவில் அச்சங்கத்தின் தலைவர் ஷாந்த சில்வா புதன்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

எரிபொருள்களை நிரப்புவதற்குச் சென்ற பௌசர்கள் அதிகாலை வரை யில் திரும்பாமையால் நெருக்கடி ஏற்பட்டிருந்தது. இன்று (நேற்று) காலையில் நிலைமைகள் சுமூகமாகியுள்ளன.

தற்போது கொலன்னாவை முனையத்திலிருந்து எரிபொருள் நிரப்பிய பௌசர்கள் நாட்டின் அனைத்துப்பாகங்களுக்கும் செல்கின்றன. ஆகவே எமது செயற்பாடுகளில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. ஏதாவது பிரச்சினை காணப்பட்டால் அதனைத் தீர்க்க நாம் உடன் நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார்.

## ராஜபக்ஷக்களின் ஆட்சியில் ஒருபோதுமே இணையோம்

### எரான் மற்றும் ஹர்ஷ திட்டவட்டம்



(தன்வீன்)

நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷ க்களின் பெரும்பான்மை பலம் உள்ள ஆட்சியில் ஒருபோதும் இணையப் போவதில்லை என்றும், பொதுத்தேர்தலை உடன் நடத்துமாறும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏரான் விக்ரமரட்ன மற்றும் கலாநிதி. ஹர்ஷ டிசில்வா ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏரான் விக்ரமரட்ன மற்றும் கலாநிதி.ஹர் டிசில்வா கபீர் ஹாசீம் ஆகியோர் ஆட்சியிடன் இணைவது பற்றி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் ஏரான் விக்ரமரட்ன மற்றும் கலாநிதி.ஹர் ஆகியோரிடத்தில் தனித்தனியாக வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கலாநிதி.ஹர்ஷ டிசில்வா கூறுகையில், நான் ஆட்சியாளர்களுடன் இணையப் போகின்றேன் என்று அமைச்சர் ஹரீன்தான் கூறுகின்றார். ஆகவே நீங்கள் அவரிடத்தில்தான் அதுபற்றிக் ☞ 2

## எல்லை நிர்ணயகுழு அறிக்கை பூர்த்தியானது

### சில தினங்களில் கையளிப்பு



உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடத்தில் கையளிப்பதற்கு நேர ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

"எமக்கு வழங்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லைநிர்ணயப் பணிகளை நாம் பூர்த்தி செய்துள்ளோம். அதற்கு அமைவாக, இறுதி அறிக்கையை நாம் தயாரித்துள்ளோம்.

அதனை விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்த்தனவிடத்தில் கையளிப்பதற்கு நேர ஒதுக்கக் கோரியுள்ளோம். அது வழங்கப்பட்டதும் சில நாட்களுக்குள் அதனைக் கையளிக்க தயாராகவுள் ளோம்" என்றார் தேசிய எல்லை நிர்ணயக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

# 4 ஆண்டுகள் கழித்தே முறைமை மாற்றம்

## கதையை மாற்றுகின்றார் ரணில்



இலங்கையில் இன்னும் 4 ஆண்டுகளின் பின்னரே மக்கள் கோரிய முறைமை மாற்றம் சாத்தியமாகும் என்று தெரிவித்திருக்கிறார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

"சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நான்கு வருடங்களில் பொருளாதாரத்தை உறுதிப்படுத்திய பின்னர், அதே பழைய முறையைப் பின்பற்றுவதா அல்லது புதிய முறையின் ஊடாக முன்னேறி வரும் உலகத்துடன் முன்னோக்கிச் செல்வதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும்" என்று அரசுத் தலைவர் தெரிவித்தார். ☞ 2

## அடக்குமுறைகள் மூலம் இந்த ஆட்சியால் தொழிற்சங்கத்தை கட்டுப்படுத்த இயலாது

### பணியாளர்கள் பணிகளில் ஈடுபடப்போவதில்லை என்று தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

கொழும்பு, மார். 30

எத்தகைய மிரட்டல்கள் வந்தாலும் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தினை விற்பனை செய்வதற்கு எதிராகத் தாம் முன்னெடுத்துள்ள போராட்டததினை கைவிடப்போவதில்லை என்று தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அமைச்சர் கஞ்சன விஜயசேகர உள்ளிட்ட ஆட்சியாளர்கள் அடக்குமுறை மூலமாக எம்மை கட்டுப்படுத்த முடியாது. பணியாளர்கள் பணித்தளத்திற்குச் சென்றாலும் பணிகளில் ஈடுபட மாட்டார்கள் என்றும் சங்கங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் பெற்றோலிய கூட்டுத்தாபன தொழில்சங்கங்களின் தலைவர் பந்தல சமன் குமார தெரிவித்ததாவது:

நாம் தொடங்கிய சத்தியாகக்கிரக போராட்டம் இப்போது மூன்றாவது நாளாக தொழிற்சங்க நடவடிக்கையாகத் தீவிரமாகியுள்ளது. இதனைக் கைவிடுவதற்கு நாம் தயாரில்லை.

இதனைத் தீவிரப்படுத்தவே திட்டமிட்டுள்ளோம். அதற்காக சாதாரண ஊழியர்கள் எதிர்காலத்தைக் காட்டிக் கொடுக்கப் போவதில்லை. அவர்கள் அலுலவலகத்திற்குச் சென்றாலும், பணிகளில் ஈடுபடப்போவதில்லை.

எம்மை கட்டாய முறையில் பணிகளிலிருந்து அகற்றி வீட்டுக்கு அனுப்ப ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை எடுக்கின்றனர். இது எமது உரிமைகளை மீறும் செயற்படாகும். அதற்கு எதிராக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பொம் - என்றார்.

## புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் ஜனாதிபதிக்கு மிதமிஞ்சிய அதிகாரம்

### மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் சுட்டிக்காட்டு

ஆட்சியாளர்களால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றதிகாரத்துக்கு (ஜனாதிபதிக்கு) மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்குகின்றதுஎன்றுகுற்றஞ்சாட்டியுள்ளது மாற்றுக்கொள்கைகளுக்கான மையம்.

இது தொடர்பில் மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த ஆட்சியால் மார்ச் 22 வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால நிலை அறிவிப்பு ஆகியவற்றின் மூலமான அதிகாரங்களைக் கடந்தகால ஆட்சிகள் பயன்படுத்திய விதத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலம் நிறைவேற்றதிகாரத்துக்கு மித மிஞ்சிய அதிகாரங்களை வழங்குவதுடன் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொறுப்புக்கூறலை உறுதி செய்கின்றது.

சிறுபான்மையினத்தவர், விமர்சகர்கள், ஆர்ப்பாட்டக்காரர்களை இலக்கு வைப்பதற்கும் சித்திரவதைகள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை வலுப்படுத்து-வதற்கும் ஆட்சியாளர்களால் பாதுகாப்புச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் பின்னணியில், இச்சட்டமூலம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்தல் என்ற பெயரில் நபர்களை முறையற்ற விதத்தில் நடத் தும் கலாசாரத்தை மாற்றுவதற்கான வலுவான அரசியல் நிலைப்பாடின்றி, வெறுமனே சட்ட மறுசீரமைப்புக்களின் ஊடாக மாத்திரம் எதனையும் சாதிக்கமுடியாது என்பதை மீளவலியுறுத்துகின்றோம்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள சட்டமூலமானது பெருமளவிற்கு ☞ 2

## தொழிற்சங்கவாதிகளான 20 பேர் கட்டாய விடுமுறையில் வீட்டுக்கு

பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தில் அத்தியாவசிய சேவைகளுக்குக் குந்தகம் விளைவித்த தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 20 பேருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியசேவைகள் கட்டளையின் பிரகாரம் எரிபொருள் விநியோகம் அல்லது அத்தியாவசிய சேவை நடவடிகைகளுக்கு இடையூறு விளைவிப்பது, தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலை தலைவருக்கு எரிசக்தித்துறை அமைச்சர் கஞ்சன விஜயசேகர அறிவுறுத்தியிருந்தார்.

அதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட 20 பேருக்கு எதிராக முதல் கட்டமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, கொலன்னாவை எரிபொருள் விநியோக முனைத்திலிருந்து அதிகாலை மூன்று மணிமுதல் எரிபொருள் விநியோகச்செயற்பாடுகள் மீண்டும் தொடங்கப்பட்டன.

இந்தச் செயற்பாடுகள் தொடங்கப்பட்டபோது விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததோடு எரிபொருள் விநியோகப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கையை இதுவரையில் நாசப்படுத்திய பௌத்த சிங்களப் பேரினவாதம் தனது கோரப் பற்களை மீண்டும் வடக்கு கிழக்கில் ஆழப் பதிக்கத் தொடங்கிவிட்டது. அதற்கான தமிழர்களின் எதிர்வினையாற்றல் மிக மிகப் பலவீனமானது.

வெடுக்குநாறி ஆதி லிங்க ஆலயம் அங்கிருந்து அழிக்கப்பட்டதைக் கண்டித்து வவுனியாவில் இன்று ஒரு கண்டனப் போராட்டம் ஆலய நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் போராட்டத்திற்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளன. ஆட்சித் தரப்போடு- சேர்ந்தியங்கும் கட்சிகளைத் தவிர மற்றைய கட்சிகள் அனேகமாக இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளன.

ஆதரவு அறிக்கையைத் தவிர இன்றைய போராட்டத்தில் தமிழ்த் தலைவர்கள் சிலரின் பங்கேற்பு, அதாவது தலையைக்காட்டும் செயல் இடம்பெறும். ஊடகங்களில் ☞ 2

## இந்திய முட்டைகள் துறைமுகத்திலிருந்து வெளிவர அனுமதி

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை துறைமுகத்தைவிட்டு வெளியே எடுத்துவர கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து குறித்த அனுமதியை உத்தியோகபூர்வமாக வர்த்தக அமைச்சுக்கு அறிவிக்கும் முகமாக எழுத்து மூலமான ஆவணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் முட்டைத் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் இந்தியாவில் இருந்து முதற்கட்டமாக 2மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டன. ☞ 2

## ஆறு. திருமுருகன் வேதனை தெரிவிப்பு



வெடுக்குநாறி ஆதி லிங்க ஆலயம் அழிக்கப்பட்டமை தொடர்பில் மிகுந்த வேதனை அடைவதாக அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

"வெடுக்குநாறி ஆதி லிங்கம் மட்டுமன்றி, கீரிமலையில் இருந்த ஆதி சிவன் கோவில் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது. சைவ ஆலயங்களை தொல்லியல் திணைக்களம் தொடர்ச்சியாக பௌத்த அடையாளங்களாக மாற்றி வருகின்றது.

முழு சைவ மக்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ள இந்த சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞ 2

## 'புதிய சட்டம் மிக மோசமனது"

பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற சர்வதேச ரீதியான அழுத்தத்திற்கு இணங்குவதுபோல் செயற்பட்டு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைக் கொண்டு வருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந் தப் புதிய சட்டம் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட மோசமானது.

சர்வதேசத்திற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக கூறிவிட்டு, புதிய சட்டத்தைக் கொண்டுவந்து தமிழர்களின் ☞ 2

## விக்னேஸ்வரன் கண்டனம்



வவுனியா வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் அழிக்கப்பட்டமை மற்றும் கடந்த சில மாதங்களாக குருந்தூர்மலை, கண்ணியா உட்பட பல வணக்க இடங்களில் சிவ வழிபாடு தடுக்கப்பட்டு குறித்த ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமது தலைகளும் தெரியும் வகையில் போராட்டத்தில் கலந்துகொள்வதில் நமது அரசியல் தலைவர்களுக்கு நிகரானவர்கள் இந்த உலகத்திலேயே யாரும் இருக்க மாட்டார்கள். இந்த விடயத்தில் மற்றவர்கள் எல்லோரும் எங்கள் தலைவர்களிடம் பிச்சை எடுக்கவேண்டும்.

இன்றைய போராட்டத்திலும் அதுவே நடக்கும். தலை வர்களும் அவர்களது வாகனங்களில்கூடவே பயணிக்கக்கூடியளவான சில அள்ளக்கைகளும் மட்டுமே வவுனியாப் போராட்டத்திற்குச் செல்வார்கள். ஏன் அப்படி என்று கேட்டால், போராட்டக்காரர்கள் விரைவாக நாள் குறித்துவிட்டார்கள். ஆற அமரப் பேசி ஒரு பொருத்தமான நாளை அறிவித்திருந்தால் எல்லோருமாகச் சேர்ந்து போராட்டம் நடத்தியிருக்கலாம் என்று சால்ஜாப்புச் சொல்வார்கள். அவர்கள் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கிறது என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். உடனடியாக எதிர்வினையாற்றுவதற்கு அவர்கள் ஒன்றும் இளைஞர்கள் அல்லரே.

இந்தப் போராட்டத்திற் கான அழைப்பு ஆலய நிர்வா கத்தால் உடனடியாக விடுக்கப்பட்டது. ஆலய நிர்வாகத் தில் முன்னணிச் செயற் பட்டாளர்களாக இருப்பவர்கள் இளைஞர்கள். எனவே அவர்கள் உடனடியாக எதிர் வினையாற்றத் துடித்தார்கள். போராட்டத்தை அறிவித்து விட்டார்கள். அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அதுவரையில் போராட்டம் நடத்தவேண்டும் என்றோ விரைந்து எதிர்வினை யாற்றவேண்டும் என்றோ சிந்திக்கவில்லை. காரணம் வயோதிபம்.

தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றிலுமே இன்று தலைமையைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர்கள் 60க்கும் 70க்கும் மேற்பட்ட வயதுடையவர்களே! அவர்கள் இத்தகைய போராட்டத்திற்குச் சட்டுப்புட்டென்று தயாராவது இயலாத காரியம். போராட்டத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர் நோய், மருந்து, மாத்திரை என்று பலவற்றையும் பற்றி அவர்கள் முதலில் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

போதாததற்கு இந்தப் போராட்டத்தால் எந்தக் கட்சி லாபமடைந்துவிடும் என்பதையும்வேறு அவர்கள் கூர்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. இன்றைய போராட்டத்திற்கு ஆதரவு என்று நேற்று யாழ்ப்பாணத்தில் அறிவித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி,

இது தொடர்பில் எதிர் வரும் சனிக்கிழமை அரசியல் கட்சிகள், சமூக மட்ட அமைப்புகள் மற்றும் மனித உரிமை சார் அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தமது எதிர்ப்பு இயக்கம் தொடர்பான திட்டவட்டமான அறிவிப்பை விடுப்பதாகவும் தெரிவித்தது.

அத்தோடு நிறுத்தியிருந்தால்கூடப் பரவாயில்லை. நாளைய தினம் (இன்று) வவுனியாவில் இடம்பெறவுள்ள எதிர்ப்பு போராட்டத்திற்கு வன்னிப் பிரதேச மக்கள் முழு ஆதரவை வழங்க வேண்டுமெனப் பகிரங்கமாக கோரிக்கை விடுக்கின்றோம் என்றும் தெரிவித்தனர். அப்படியென்றால் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களும் நாட்டின் மற்றைய பகுதிகளில் உள்ளவர்கள் எல்லோரும் இவர்கள் நடத்தும் போராட்டத்திற்குத் தான் வரவேண்டும் என்று அர்த்தமா என்ன?

"என்ன கொடுமை சரவணா இது!"

இன்றைய போராட்டத்தில் மக்களை அணிதிரட்டியிருக்க வேண்டியவர்கள் அரசியல் தலைவர்களே, ஆனால் அது நடக்கவில்லை. பத்தோடு பதினொன்றாக ஒரு போராட்டமாக இன்றைய போராட்டமும் நடந்தேறும். அது பற்றிய புலனாய்வு அறிக்கையைப் துக்கிப் பார்த்துவிட்டு கொழும்பு ஆட்சியாளர்கள் இத்தகைய போராட்டங்களைப் புறங்கையால் ஒதுக்கிவிடுவார்கள். இவர்களும் ஏதோ நாமும் எதிர்ப்புக் காட்டினோம் என்று காட்டிக்கொண்டதோடு ஓய்ந்து போய்விடுவார்கள். ஆனால் பேரினவாதம் ஓய்வு ஒளிச்சலின்றித் தனது இலக்கில் குறியாகச் செயற்பட்டுக்கொண்டே இருக்கும். தமிழ்த்தலைவர்கள் தமது உடல் ஒத்துழைக்கும்போது போராட்டம் நடத்தத் தயாராகுகையில் அந்தப் பிரச்சினையே நீர்த்துப்போய் வழிந்திருக்கும்.

- இடிமின்னல் -

## 4 ஆண்டுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆனந்த கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் புதன்கிழமை கலந்துகொண்ட அவர் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

அரசுத்தலைவராக கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது "அரகலய" போராட்டத்தின் மூலம் மக்கள் கிளர்ச்சி செய்தனர். நாட்டைத் தோல்வியடைய வைத்த கடந்தகால அரசியல் முறைமை முற்றிலுமாக மாற்றப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

முற்றிலுமான முறைமை மாற்றம் ஒன்றைக் கேட்டே அந்த நீண்ட போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டார். அவரது வெற்றிடத்திற்கு நாடாளுமன்றம் மூலம் தெரிவாகி வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

பதவிக்கு வந்ததும் மக்களின் கோரிக்கையாகிய முறைமை மாற்றம் அவசியம் என்று தொடர்ந்து பேசிவந்தார். அத்தோடு, தனது கொள்கை விளக்க உரைகளிலும் அவர் அதனைக் குறிப்பிட்டுவந்தார். ஆனால், இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்ததைத் தொடர்ந்து, பொருளாதார மீட்சியை அடுத்தே முறைமை மாற்றம் வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று அவர் கூறியிருப்பது பெரும் அதிர்ச்சியளிப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

"இலங்கைமக்கள் ரணில் விக்கிரமசிங்கவால் முற்றிலும் ஏமாற்றப்பட்டிருக்கீறார்கள்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஆனந்தாக்கல்லூரி உரையில் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

பசுமைஹைட்ரஜன் என்பது எதிர்காலக் கப்பல்களை இயக்கும் முக்கிய வலுசக்தி. எம்மிடம் பச்சை எமோனியா உள்ளது. அதற்காக திருகோணமலையை முக்கிய துறைமுகமாக மாற்ற வேண்டும். இவற்றின் ஊடாக , வலுச் சக்தி மிகுதியான நாடாக இலங்கை மாறும். அதிலிருந்து நாம் கார்பன் கிரடிட்டை பெறலாம். ஏனைய நாடுகள் எங்களிடம் இருந்து கார்பன் கிரெடிட்களை வாங்கும். இயற்கையை வளர்க்கும்போது அதற்காக எமக்குப் பணம் கிடைக்கும். அந்தப் பணத்தைக் கொண்டு நம் கடனைக் குறைக்கலாம். நம்மிடம் பெரும் சக்தி இருக்கிறது. அவற்றை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும். எங்களுக்கெனத் தனித்துவமான கலாசாரம் உள்ளது. பௌத்த மற்றும் இந்து மத வழிபாட்டிடங்கள் உள்ளன. அவற்றை நாங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அண்டை நாடான இந்தியாவில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். அதில் குறைந்த பட்சம் ஒரு மில்லியன் பேரை ஆண்டொன்றுக்குச் சுற்றுலாவிகளாகக் கொண்டு வந்தால்போதும். வேறு எதுவும் தேவையில்லை. இந்தியா இன்று வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்தியா முன்னேறுவதற்கு அதனிடம் சில மூலப் பொருட்கள் இல்லை, அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும். ஆனால் இதற்கெல்லாம் அவர்களிடம் போதிய துறைமுக வசதி இல்லை. அவர்களின் துறைமுகங்களில் போதிய இடவசதி இல்லை. எனவே கொழும்பைப் பெரும் துறைமுகமாக மாற்ற வேண்டும். புதிய தெற்கு துறைமுகத்தைப் போன்றே வடக்கு துறைமுகமும் உருவாக்கப்படுகிறது.

கடல்சார் பொருளாதாரத்தை நாம் உருவாக்க முடியும். இதுவரை எந்தஒருநாடும் இதனைச் செய்யவில்லை.

நாம் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தலாம். நம்மிடம் தகவல் தொழில்நுட்பம் இருக்கிறது. இதில் முக்கிய அங்கம் செயற்கை நுண்ணறிவை பெறுவது. குறிப்பாக நம்மிடம் உள்ள பிரிவு அது. எதிர்காலத்தில், நாங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்குச் செல்லவேண்டும். மற்ற நாடுகளைவிட முன்னேறும் நாடாக மாறவேண்டும். அத்தகைய நாட்டைக் கட்டியெழுப்ப புதிய தலைவர்கள் தேவை. எங்களால் வழிகாட்ட மட்டுமே முடியும்.

யார் தலைமை ஏற்க வேண்டும்? இளைஞர்களாகிய நீங்கள் தான் தலைமைத் துவத்தை பெற வேண்டும். 1977 ஆம் ஆண்டில் ஜே.ஆர் கூட அது உங்கள் எதிர்காலம் என்றுதான் கூறினார். அதனால் நல்லது கெட்டது இரண்டும் வளர்க்கப்பட்டது. இப்போது எனக்கும் உங்கள் எதிர்காலம் என்றுதான் சொல்லவேண்டும். அந்தச் சவாலை ஏற்க முடியுமா? நமது எண்ணங்களின்படி சமுதாயத்தை மாற்றுவது பயனற்றது. இளைஞர்கள் புதிய தொழில்நுட்பத்துடன் உள்ளனர். அந்த சமூகத்திற்கு செல்லுங்கள். எல்லாவற்றினதும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தப் பாடசாலையிலுள்ள திறமையானவர்கள் முன்னேறிச் செல்வார்கள். சவால்களை இருந்தால் அதனை ஏற்க பயப்பட வேண்டாம். சவால்களை ஏற்றுக்கொண்டால் தோற்றுவிடுவோம் என்று நினைத்தால் ஒன்றும் செய்ய முடியாது. சவால்களையோசிக்காமல் ஏற்றுக்கொண்டால் முன்னேறிச் செல்ல முடியும்.

19ஆம் நூற்றாண்டில் நவீன இலங்கையை உருவாக்க ஆனந்தா முன்னோடியாகச் செயற்பட்டது. எனவே 20ஆம் நூற்றாண்டில் முன்னோடியாகச் செயற்படுங்கள். இந்த மாற்றங்களை ஒரு வருடத்தில் செய்யமுடியாது. பத்து, பதினைந்து, இருபது வருடங்கள் ஆகலாம். இது உங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்காது. இன்னும் 25 ஆண்டுகளில் உங்கள் வயது எவ்வளவு? இங்குள்ள யாரும் 50 வயதுக்கு மேல் வயதாகியிருக்க மாட்டார்கள். 45 முதல் 55 வயது வரை இருக்கும். எனவே உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்கிக்கொள்ளுங்கள்.

குடியரசு உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் கடக்கும் முன்பே சீனா வளர்ந்த நாடாக மாற்றப்படும் என்று கூறப்பட்டது. நூற்றாண்டுவிழாவுக்கு முன் நவீன இந்தியா உருவாகும் என்று பிரதமர் மோடி கூறினார். அதாவது 2047ஆம் ஆண்டில். ஏன் நம்மால் முடியாது? அந்த சவாலை நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்களும் நாமும் அதனை செய்யலாம் - என்றார்.

## ராஜபக்ஷக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கேட்க வேண்டும்.

செயற்பாட்டு ரீதியாக பணியாற்றுவதற்கு எம்மிடத்தில் அணியொன்று உள்ளது. அந்த அணிக்குத் தேவையாக இருப்பது மக்கள் ஆணைதான்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுத் தேர்தலை நடத்தமுடியும். அதற்கான அறிவித்தலை அவர் விடுத்தால் மக்களின் ஆணை யாருக்கு என்பதை வைத்து அடுத்த கட்டம் பற்றி பேசலாம் - என்றார்.

ஏரான் விக்ரமரட்ன கூறுகையில், ஹர் அவரின் நிலைப்பாட்டைக் கூறியுள்ளார். கபீரும் அவரின் நிலைப்பாட்டைக் கூறுவார். என்னைப் பொறுத்த வரையில் தற்போது இருப்பது ராஜபக்ஷவினரின் பெரும்பான்மை நாடாளுமன்றம். அதில் நாம் இணைவோம் என்று யாரும் நினைக்க வேண்டாம். ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கினாலும் ராஜபக்ஷக்கள் தான் இருக்கின்றார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். அத்தகைய அணியில் இணைந்துகொள்ள எமக்கு எந்தத் தேவையும் இல்லை. நாம் மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வருவோம் - என்றார்.

## எரிபொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தினத்துக்குள் (நேற்றைய தினத்துக்குள்) எரிபொருட்களைகொள்வுசெய்தவிநியோகத்தர்களுக்கு இழப்பீடு வழங்கவுள்ளோம்.

அவர்கள் கொள்வனவு செய்த எரிபொருட்களின் அளவுக்கு அமைவாக விலை குறைப்புச் செய்யப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு ஏற்பட்ட நட்டத்தின் ஒருபங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செலுத்தும்.

திடீர் விலைக்குறைப்பு தீர்மானத்தினை ஆட்சி எடுத்த காரணத்தினால் இம் முறை மாத்திரம் இழப்பீடு வழங்கப்படுகின்றது - என்றார்.

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்த முட்டைகள் மார்ச் 23 கொழும்புத் துறைமுகத்தினை வந்தடைந்தபோதும் அவற்றை வெளியே எடுத்துச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. இது தொடர்பில் வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னான்டோ விசனம் தெரிவித்திருந்தார். அதிகாரிகள் ஏன் தாமதப்படுத்துகிறார்கள் என்பது தெரியவில்லை என்று கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே புதன்கிழமை முட்டைகள் வெளியே செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உடனடியாக நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து உரிய தண்டனை வழங்க வேண்டும்" என்று அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் மேலும் தெரிவித்தார்.

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடந்த 2018ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு, நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்ப பாதபயங்கரவாதஎதிர்ப்புச்சட்ட மூலத்தை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

இருப்பினும் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத பல்வேறு குற்றங்கள் இப்புதிய சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டிருப்பதுடன், அவற்றில் சில விடயங்கள் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பில் தீவிர கரிசனையைத் தோற்றுவித்திருக்கின்றன.

இருப்பினும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் பொலிஸ் அதிகாரியொருவரின் முன்னிலையில் வழங்கும் வாக்கு மூலம் ஆதாரமாகக் கருதப்படமாட்டாது என்பது மாத்திரமே ஏற்கனவே நடைமுறையிலுள்ள பயங்கரவாதத்தடைச் சட்டத்துடன் ஒப்பிடுகையில் இப்புதிய சட்டமூலத்திலுள்ள ஒரேயொரு முன்னேற்றகரமான மாற்றமாகும்.

தடுப்புக்காவல் உத்தரவு தொடர்பான தீவிர கரிசனை இன்னமும் தொடர்கின்றது. குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சரிடம் காணப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவு வழங்கும் அதிகாரம், இப்புதிய சட்டமூலத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இதனூடாக வரையறுக்கப்பட்டுள்ள தடுப்புக்காவலில் வைப்பதற்கான காலப்பகுதி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிபந்தனைகளும் கரிசனைக்குரியவையாகவே காணப்படுகின்றன.

அத்தோடு இச்சட்டமூலத்தின் ஊடாக அமைப்புக்களுக்கு எதிராகத் தடையுத்தரவு விதிப்பதற்கான அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரங்கள், நாட்டில் நில வும் சட்டபூர்வமான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்குவதற்குப் பயன்படுத்தப்படக்கூடும் என்ற சந்தேகம் நிலவுகின்றது.

மேலும் இப்புதிய சட்ட மூலத்தில் 'பயங்கரவாதக் குற்றங்களுக்கு' வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் மிகவும் பரந்துபட்டதாகக் காணப்படுவதுடன், அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் இலங்கையின் நீண்ட காலஒடுக்குமுறைவரலாற்றை நினைவூட்டுகின்றது.

இலங்கையானது மீட்சியையும், அபிவிருத்தியை யும் நோக்கிப் பயணிக்கும் தற்போதைய சூழ்நிலையில், மீறல்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபடுதல் போன்றவற்றை முடிவுக்குக்கொண்டு வருவதற்கும் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கும் ஏற்றவாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமாகும் - என்று மாறுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

## 'புதிய சட்டம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அரசியல் வீரூப்பங்களுக்கான குரல்களை பயங்கரவாத முலாம் பூசி ஒடுக்குவதற்காக ஆட்சியாளர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இச் சட்டத்தை ஒட்டுமாத்த தமிழர்களும் எதிர்க்கவேண்டும்.

இதற்கெதிராக வடகிழக்கிலுள்ள அரசியல் கட்சிகள் அமைப்புக்களை இணைத்து பெரும் எதிர்ப்பை முதற்கட்டமாகவும், பின்னர் தாயகத்திற்கு வெளியில் இச் சட்டத்தை ஜனநாயக ரீதியில் எதிர்க்கும் அமைப்புக்களுடனும் கலந்துரையாடி அடுத்த கட்டமாகவும் வெளியிடவுள்ளோம்.

இச்சட்டமூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒட்டுமொத்தமாக அடக்குவதுடன் முழு நாட்டிலும் ஜனநாயகம் என்ற பெயரிலே சர்வாதிகார அட்டூழியத்தை நிலைநிறுத்தக் கூடியது என்பதிலே நாடு தழுவிய ரீதியிலே எதிர்ப்பு வெளிப்படுத்தப்படும். இச் சட்டமூலம் கைவிடப்படும் வரை எமது எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளோம் - என்றார்

## விக்னேஸ்வரன் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இடங்களை பௌத்த மரபுரிமைகளாக, விகாரைகளாக மாற்ற தொல்பொருள் திணைக் களமும் படையினரும் சேர்ந்து நடவடிக்கையில் இறங்கியுள்ளமை ஆகிய வற்றை நாங்கள் வெகுவாகக் கண்டிக்கின்றோம் - என்று தமிழ் மக்கள் கூட் டணித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் க.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முக்கியமான ஒரு விடயத்தை அரச தொல்பொருள் திணைக்களத்தினரும் படையினரும் மறந்துவிட்டார்கள். தற்போது இந்துக்கள் வணங்கும் வளாகங்களில் பௌத்த எச்சங்கள் இருப்பது உண்மை என்றால் அவை தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த காலத்தவையாக இருக்கவேண்டும். அதை முதலில் திணைக்களம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் தமது பௌத்த சின்னங்களை பாதுகாக்க வேண்டும் என்று எண்ணாத நிலையில் சிங்கள பௌத்தர்கள் இந்தக் காரியத்தில் இறங்கியமை குறித்த சின்னங்கள் இருக்கும் இடங்கள் சிங்கள பௌத்த காலத்திற்கு உரியவை என்று காட்டுவதற்கேயாகும். ஆனால் சிங்கள பௌத்தர்கள் குறித்த இடங்களில் என்றுமே வாழ்ந்ததில்லை. தமிழ் பௌத்தர் கால எச்சங்களை சிங்கள பௌத்த கால எச்சங்கள் என்று காட்டத் தொல்பொருள் திணைக்களம் முயற்சிக்கும்; அவர்களின் அந்த கரவான நடவடிக்கை உடனே நிறுத்தப் படவேண்டும்.

முதலில் குறித்த எச்சங்கள் எந்தக்காலத்தவை என்று அறிந்து அந்தக்காலத்தில் சிங்கள மொழியும் சிங்கள இனமும் இருந்தனவா என்று அறிந்த பின்னர், இவை பற்றி தமிழ் மக்களுடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடலாம். அவை தமிழ் பௌத்த கால சின்னங்கள் எனில் மாகாணசபைகளுக்கூடாகவே இவை பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தான்தோன்றித்தனமான மத்திய அரசின் கீழான தொல்பொருள் திணைக்களம் தமது தேவையற்ற இன ரீதியான மத ரீதியான இவ்வாறான செயல்களை உடன் நிறுத்த வேண்டும்.

எமது மக்கள் யாவரும் ஒன்று கூடி கண்டிப்பு செலுத்தும் போராட்டத்திற்கு நானும் எனது கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியும் எமது மனமார்ந்த ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir

# வெடுக்குநாறி குறித்து விசாரணை நடத்தி உடனடியாக அறிக்கையை வழங்குங்கள்

## பொலிஸ்மா அதிபரிடம் அமைச்சர் ஜீவன் கோரிக்கை



வவுனியா,நெடுங்கேணி - வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம்சிலைஉடைத்து வீசப்பட்டசம்பவம்தொடர்பில் விசாரணை நடத்தி முழுமை யானதொரு அறிக்கையை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம், அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தான் வவுனியா, வெடுக்குநாறி மலைக்கு செல்லவுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

இதன்போது சேதமாக் கப்பட்டசிலைமீள்பிரதிஷ்டை செய்யப்படும்எனவும்அமைச் சர் தெரிவித்துள்ளார்.

வவுனியா,நெடுங்கேணி யில் அமைந்துள்ள வெடுக்கு நாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதி லிங்கம் சிலை உடைத்து வீசப்பட்டுள்ளது.

அதேபோன்று விக்கிர கங்களும் மாயமாகியுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், குற்ற வாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். சம்பவம் தொடர்பில் அறிந்த பின்னர் தானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவும் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

உரியவிசாரணைகளை முன்னெடுத்து, சட்டத்தை செயற்படுத்துமாறு ஜனாதி பதி பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட் டுள்ளார்.




# இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த நான்காம் சுற்றுப் பேச்சு கொழும்பில்

அடுத்த வருடம் (2024) கைசாத்திட உத்தே சிக்கப்பட்டுள்ள இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த நான்காம் சுற்று பேச்சுகள் கொழும்பில் ஆரம்பமாகின.

பாரிய மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட தென்கிழக்காசிய சங்கத்திற்குரித்தான நாடுக ளுடன் பொருளாதார உறவுக ளைப் பலப்படுத்திக்கொள் வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர் பார்ப்பாகும்.

அதற்கமைய, இலங் கையின் ஏற்றுமதி பொருளா தாரத்துக்காக தாய்லாந்து சந்தைக்குள் நுழைவதற் கான வாய்ப்புக்களை அதி கரித்துகொள்வது மாத்திர மன்றி, அந்த பொருளாதாரச் சந்தையினூடாக ஏனைய ஆசியான் நாடுகளின் பொருளாதார சந்தைகளுக் கான பிரவேசத்தை அதி கரித்துக்கொள்ளதுடன் தற்போது காணப்படும் சுங்க வரி அல்லாத தடைகளை குறைத்துகொள்வதே இலங்கை தரப்பு பேச்சின் நோக்கமாகும்.

மேற்படி 4 ஆம் சுற்று பேச்சுகளுக்காக தாய்லாந்து வர்த்தக கலந்துரையாடல் திணைக்களத்தின் பணிப்பா ளர் நாயகம் அவுரமன் சுப் தாவீதும் தலைமையில் 35 அதிகாரிகள் உள்ளடங்க ளான தாய்லாந்து தூதுக் குழு மார்ச் 26 ஆம் திகதி இலங்கை வந்தடைந்தது.

அதேபோல், இருநாடுக ளுக்கும் இடையில் காணப் படுகின்ற நீண்ட கால சமய மற்றும் கலாசாரத் தொடர்பு களை மேலும் வலுப்படுத் திக்கொள்ளும் வகையில் தாய்லாந்து குழுவினரால் கங்காராம விகாரைக்கு 500 அன்னதானப் பாத்திரங்கள் நன்கொடையளிக்கப்பட்டன.

ஜனாதிபதிசெயலகத்தின் பிரதம மத்தியஸ்தர் கே.ஜே. வீரசிங்க தலைமையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பொருளாதார, வணிக மற்றும் உணவு பாது காப்பு அமைச்சு, தொழில் அமைச்சு, பொருளாதார மற் றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம், சட்டமா அதி பர் திணைக்களம், வணிகத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், இலங்கைமத் தியவங்கி மற்றும் முதலீட்டுச் சபை உள்ளிட்ட நிறுவன அதி காரிகளை கொண்ட தேசிய வர்த்தக பேச்சுகளுக்கான குழுவினர் இலங்கையை பிர திநிதித்துவப்படுத்தி பேச்சில் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பிலானபேச்கள்நேற்று (புதன்கிழமை) நிறைவ டைந்தன.

# நிர்மாணத் துறையின் பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பது அரசின் எதிர்பார்ப்பு

## சாகல ரத்நாயக்க கூறுகிறார்

நாட்டின் நிதி நிலைமை சீரானதுடன், நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சி னைகளுக்கு படிப்படியாக தீர்வுகள் வழங்கப்படும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியு மான சாகல ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கான வட்டி விகிதங்கள் மற்றும் வங்கி மீட்பு நடவடிக்கைகள் தொடர்பானசெயற்குழுஜனாதி பதி அலுவலகத்தில் கூடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொரு ளாதார நெருக்கடியில், நிர் மாணத் துறையினர் எதிர் நோக்கும் நிதிச் சிக்கல்கள் மற் றும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட சாகல ரத்நாயக்க, நிர்மாணத்துறையில் ஏற் பட்டுள்ள அனைத்துப் பிரச்சி னைகளுக்கும் தீர்வுகளை வழங்குவதே அரசாங்கத் தின் எதிர்பார்ப்பு எனத் தெரி வித்துள்ளார்.



நிதியமைச்சின் செய லாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் நிதித் துறையின் தற்போதைய நிலைமைதொடர்பாகவிளக்க மளித்தனர்.

இந்தக் கலந்துரையாட லில் பொருளாதார விவகா ரங்களுக்கான ஜனாதிபதி யின் ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க உட் படகுழுஉறுப்பினர்கள்கலந்து கொண்டனர்.

# அனைத்து ஊழியர்களின் உரிமைகளையும் பாதுகாக்க அரசு எப்போதும் பாடுபடுமாம்

அனைத்து ஊழியர்க ளின் உரிமைகளையும் பாதுகாக்க அரசாங்கம் எப் போதும் பாடுபடும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ் சித்சியம்பலாபிட்டியதெரிவித் துள்ளார்.

சர்வதேச நாணய நிதி யத்தில் இருந்து பெறப்படும் கடன் நிவாரணத்தின் மூலம் நாட்டின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக் கானநல்லநடவடிக்கைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகள் வலுப்படவேண்டும்

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்திலும் பார்க்கப் பயங்கரமானது, அது அரசுத் தலைவருக்கு மிதமிஞ்சிய அதிகாரத்தைத் தருகின்றது என்கிற கண்டனங்கள் இப்போது வெளிக்கிளம்பியுள்ளன.

ஏற்கனவே முன்னிலை சோசலிசக் கட்சி இந்தச் சட்டத்திற்குத் தனது எதிர்ப்பைப் பதிவு செய்தது. இந்தச் சட்டத்தால் அண்மையில் ஆகக்கூடுதல் பாதிப்பை எதிர்கொண்ட கட்சி என்கிற வகையில் அந்தக் கட்சி முதலில் தனது எதிர்ப்பையும் கண்டனத்தையும் பதிவு செய்தது.

அடுத்துத் தமிழ் அரசுக் கட்சி இந்தச் சட்டத்தை முற்றிலும் நிராகரிப்பதாக அறிவித்தது. பயங்கரவாதத் தடைச் சட்டம் என்று ஒன்று தேவையில்லை. சாதாரண சட்டங்களின் கீழேயே அத்தகைய குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முடியும் என்கிற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையையும் சுட்டிக்காட்டிய தமிழ் அரசுக் கட்சி, முந்தைய பயங்கரவாதத் தடைச் சட்டத்திலும் பார்க்க மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிராகரிப்பதாக அறிவித்தது.

புதிய சட்ட வரைவை எதிர்த்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். அதைத் தொடர்ந்து நேற்று விழித்துக்கொண்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

அதேநேரத்தில் அரசியல் விடயங்களில் காத்திரமான பங்களிப்பை வழங்கிவரும் பொது அமைப்புக்களில் ஒன்றான மாற்றுக்கொள்கைகளுக்கான மையமும் இந்தப் புதிய சட்ட வரைவு குறித்த தனது கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளது. புதிய சட்டமூலம் அரசுத் தலைவருக்கு அதிகூடிய அதிகாரங்களை வழங்குகின்றது என்று தெரிவிக்கிறது.

“பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால நிலை அறிவிப்பு ஆகியவற்றின் மூலமான அதிகாரங்களைக் கடந்தகால ஆட்சிகள் பயன்படுத்திய விதத்தை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலம் நிறைவேற்றதிகாரத்துக்கு மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்குவதுடன் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொறுப்புக்கூறலை உறுதிசெய்கின்றது.

சிறுபான்மையினத்தவர், விமர்சகர்கள், ஆர்ப்பாட்டக்காரர்களை இலக்குவைப்பதற்கும் சித்திரவதைகள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை வலுப்படுத்துவதற்கும் ஆட்சியாளர்களால் பாதுகாப்புச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் பின்னணியில், இச்சட்டமூலம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்தல் என்ற பெயரில் நபர்களை முறையற்ற விதத்தில் நடத்தும் கலாசாரத்தை மாற்றுவதற்கான வலுவான அரசியல் நிலைப்பாடின்றி, வெறுமனே சட்ட மறுசீரமைப்புக்களின் ஊடாக மாத்திரம் எதனையும் சாதிக்கமுடியாது என்பதை மீளவலியுறுத்துகின்றோம்.” – என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த வகையில் தெற்கில் சிங்களவர்களும் வடக்கில் தமிழர்களும் இவற்றுக்கு மேலாகப் கொழும்பில் இயங்கும் அரசியல்சார் பொது அமைப்புக்களும் இந்த விடயத்தில் ஒரே கருத்தைப் பிரதிபலித்துள்ளன. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குத் தனது எதிர்பபை வெளியிட்டு வந்த ஐக்ககிய மக்கள் சக்தியும் ஜேவிபியும் இது தொடர்பான தமது நிலைப்பாட்டை வெளியிட்டதாக அறியமுடியவில்லை. விரைவில் அவற்றின் கருத்துக்களையும் வெளிப்படுத்த வைத்து, இந்தப் புதிய பயங்கர சட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம்.

தற்போது அரசுத் தலைவர் மக்களாட்சி மாண்புகளைத் தூக்கித் தூரப்போட்டுவரும் நிலையில் இந்தப் புதிய சட்டத்தையும் அவரது கையில் கொடுத்தல் கொடுங்கோல் ஆட்சியை மட்டுமே எதிர்காலத்தில் பார்க்க முடியுமாக இருக்கும். அதற்கு வழிவகுக்காமல் சாத்தியமான அனைத்து வழிகளிலும் இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றாமல் பார்த்துக்கொள்வது அவசியம். அவசரம்.

## ஆரம்ப சுகாதார துறைகளை மேம்படுத்துவதற்கு ஒத்துழைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்



கொழும்பு, மார்ச் 30

ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு தற்போது வழங்கப்படும் உதவிகளுக்கு மேலதிகமாக, அடுத்த சில வருடங்களுக்கு நாட்டில் ஆரம்ப சுகாதார துறை மற்றும் ஏனைய சுகாதார துறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி தலைவர் ஷிக்சின் சென் மற்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகியோருக்கிடையிலான சந்திப்பு பிலிப்பைன்ஸ் - மணிலா நகரிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

நீண்ட கலந்துரையாடலின் பின்னர், இலங்கைப் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைத்ததுடன், இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு தங்களால் இயன்ற உயர்மட்ட ஆதரவை வழங்குவதாக அவர்கள் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுடன் சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, நிதி இராஜாங்க அமைச்சர் ஹெரான் சேமசிங்க மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உள்ளிட்ட குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய ஓம்புட்ஸ்மனாக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.ஹிரிபுரேகமவை நியமிக்க அரசமைப்பு பேரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 30

31 ஆம் திகதி முதல் வெற்றிடமாகும் நிர்வாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்) பதவிக்கு ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.கே. ஹிரிபுரேகமவை நியமிக்கும் ஜனாதிபதியின் பரிந்துரை அரசமைப்புப் பேரவையால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

சபாநாயகரும், அரசமைப்புப் பேரவையின் தலைவருமான மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த வாரம் அரசமைப்புப் பேரவை கூடியபோதே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அத்துடன், அரசமைப்பின் 41(ஆ) பிரிவின் கீழ், அரசமைப்புப் பேரவையால் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான விண்ணப்பப் படிவங்களும் பரிசீலிக்கப்பட்டன. இதற்கு அமைய கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த விண்ணப்பப் படிவங்களில் குழுவின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கான நால்வரின் பெயர் ஏகமனதாக ஜனாதிபதிக் குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புக்கு அமைய கணக்காய்வாளர் நாயகம், பதவி அடிப்படையில் கணக்காய்வுச் சேவை ஆணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சாகர காரியவசம் மற்றும் கபீர் ஹாசிம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத கலாநிதி பிரதாப் ராமானுஜம், கலாநிதி தில்குஷி அனுலா விஜேசுந்தர மற்றும் கலாநிதி தினோ சமரரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## எழுவைதீவின் பனைவளத்தை பாதுகாக்க விசேட நடவடிக்கை

### சிறீதரன் எம்.பி. உறுதி



எழுவைதீவின் பெருவளமாக உள்ள பனைவளம் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கும், கருவேலை மரங்களின் பரவலை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுவைதீவு மக்களிடம் தெரிவித்துள்ளார்.

எழுவைதீவு மக்களும், கடற்றொழிலாளர்களும் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று செவ்வாய்க்கிழமை எழுவைதீவில் நடைபெற்றது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்தக்கலந்துரையாடலில், அவர்களது அழைப்பின் பேரில் கலந்துகொண்டிருந்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, எழுவைதீவின் பெரு வளமாக உள்ள பனைவளம் அழிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும், அதிவேகமாக பரவிவரும் கருவேலை மரங்களின் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், தொடர்ச்சியாக தாம் எதிர்கொள்ளும் குடிநீர், போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகள் பற்றியும் மீன்களை பதனிடுதலில் உள்ள இடர்பாடுகள் உட்பட மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகள் தொடர்பாகவும் அந்தப் பகுதி மக்களும், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சகவாழ்வை சீர்குலைக்கும் முடிவுகளை அமுல்படுத்தாதீர்கள் கிழக்கு ஆளுநருக்கு மட்டு சர்வமதப் பேரவை வேண்டுகோள்!








சமூக நல்லுறவு, சகவாழ்வு ஆகியவற்றோடு வாழும் சமூகங்களிடையே சமாதானத்தைச் சீர் குலைக்கும் முடிவுகளை எடுத்து அமுல்படுத்த வேண்டாம் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

மாவட்ட சர்வமதப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடல் மட்டக்களப்பு கூட்டுறவு கேட்போர் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொழுது மாவட்டத்தில் இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் அதிகாரபூர்வ விடயங்கள் பற்றிய கரிசனைகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்களும் அதன் சமாதான செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மீன் பாடும் தேன் நாடு எனும் பூர்வீகத் தமிழ்ப் பெயரை ‘மீனகய’ என்று மாற்றியிருப்பது, அதேபோன்று மட்டக்களப்பு கொழும்புக்கு இடையிலான ‘உதய தேவி’ ரயில் சேவைக்கு சிங்களப்பெயரைச் சூட்டியிருப்பது, மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகிலுள்ள பூங்காவிற்கு சிங்களப் பெயரைச் சூட்டியிருப்பது, மேலும், இவ்வாரம் தொன்மை வாய்ந்த பெயரைக் கொண்ட ஏறாவூர் புன்னைக்குடா வீதியை சிங்கள சமூகத்தவரின் ‘எல்விஸ் வல்கம’ வீதி எனப் பெயர்மாற்ற நடவடிக்கை எடுத்திருப்பது உள்ளிட்ட இன்னும் பல விடயங்களை சமூக நல ஆர்வலர்கள் முன்வைத்தனர்.

இதன்போது இவ்வாறான பூர்வீகங்களையும் சிறுபான்மை இனங்களின் அடையாளங்களையும் மாற்ற எடுக்கும் அதிகாரபூர்வ நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டாம் என ஆளுநரைக் கோருவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வேண்டுகோள் கடிதங்கள் ஆளுநர், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் உட்பட சமாதான செயற்பாட்டு அமைப்புக்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் இணைப்பாளர் மனோகரன் தெரிவித்தார்.

# சைவ அமைப்புகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கலந்தாய்வு!

**நல்லை குரு முதல்வர் தலைமையில் நாளை**

வடக்குகிழக்கிலுள்ள சைவசமையம் சார்ந்த அமைப்புக்கள், கோவில் தர்மகர்த்தாசபையினர், ஆதீன கர்த்தாக்கள், கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் நாளை (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்துக்கு மேற்குறிப்பிட்ட அமைப்புக்களைச்சார்ந்த மூன்று பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சைவக்கோவில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் சைவ மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கவேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்ட அமைப்புக்களைச் சார்ந்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# கான்ஸ்டபிளை தாக்கிவிட்டுசென்ற சந்தேகத்தில் 5 அதிரடிப்படையினர் கைது!

நவகத்தேத்கமவில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைத் தாக்கி ஓட்டோவில் அழைத்துச் சென்று இடைவழியில் விட்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புத்தளம் முகாமைசேர்ந்தஇரண்டு பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ்சார்ஜன்ட் மற்றும்இரண்டுபொலிஸ் கான்ஸ்டபிள்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள 5 பொலிஸ் விசேட அதிரடிப்படையினரைக் கைதுசெய்ய தேடும் போதே இவர்கள் ஆனமடுவ பொலிஸில் சரணடைந்ததாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்ததுள்ளார்.

குறித்த பொலிஸ் பொலிஸ் கான்ஸ்டபிளைத் தாக்கிய இவர்கள் மயானம் ஒன்றுக்கு அருகே கைவிட்டுச் சென்றதாகவும் நவகத்தேத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன விடுதலை



மிஹின் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியபோது அரசாங்கத்துக்கு 883 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கை தொடர முடியாது என சஜின் வாஸ் குணவர்தனசார்பில்ஆஜரான சட்டத்தரணிகள் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்று கொழும்பு மேல் நீதிமன்றநீதிபதிதமித்தொட்டவத்த இந்ததீர்ப்பைவழங்கியுள்ளார்.

இலஞ்சஊழல்ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்திருந்து.

# யாழில் போதைப்பொருள் விற்றார் பெண் வாங்கிய மாணவன் உட்பட 10 பேர் கைது

யாழ்ப்பாண மாவட்டத்தில்நீண்டகாலமாகபோதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் செவ்வாய்க்கிழமை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் வியாபாரியிடம் ஹெரோயின்வாங்கிப்பாவிக்கும்10வாடிக்கையாளர்களும் செவ்வாய்க்கிழமை கைது செய் யப்பட்டுள்ளதோடு அவர்களிடமிருந்துபோதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில்ஒருவர்யாழ்ப்பாணத்தில் உள்ளபிரபலபாடசாலைஒன்றின்மாணவர்எனவும், கைது செய்யப்பட்டோர்17தொடக்கம் 22 வயதுக்குட்பட்டவர்கள் எனவும்தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் வியாபாரி நீண்ட காலமாக போதை பொருள் விற்று வருகின்றமை தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின்பொலிஸ்பரிசோதகர் மேனன் தலைமையிலான அணியினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த இடம்சுற்றிவளைக்கப்பட்டு போதைப் பொருள் வாங்கியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# விரட்டியடிக்கத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால் வனவிலங்கு அதிகாரியை துரத்திசென்று கொன்ற யானை!

கலன்பிந்துனுவ பிரதேசத்துக்குள் புகுந்த யானைக் கூட்டத்தை விரட் டச் சென்ற ரித்திகல வனஜீவ ராசிகள் அலுவலகத்தின் வன ஜீவராசிகள்பாதுகாப்புஅதிகாரி ஒருவரையானைதாக்கியதில் அவர்உயிரிழந்துள்ளார்எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாத்தளைபிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதான பி.எம். விஜய்கோன்என்பவரேஉயிரிழந்துள்ளார்.

சுமார் இருபது பேர் கொண்ட வனவிலங்கு அதிகாரிகள் குழுவொன்று காட்டு யானைக் கூட்டத்தை விரட்ட துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த யானையொன்று வனவிலங்குஅதிகாரிகளைத் துரத்திச் சென்ற நிலையில் அவர்களில் ஒருவரைக் கொன்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# போலி வெளிநாட்டு முகவர் மட்டக்களப்பில் கைதானார்!

மட்டக்களப்பு நகரில் போலி வெளிநாட்டு முகவர் நிலையம் ஒன்றை நடத்தி வந்த மூதூரைச் சேர்ந்த ஒருவரைசெவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம்தொடர்பில்தெரியவருவதாவதாவது-

குறித்த நபர் சுற்றுலா துறைக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்று அதற்கான காரியாலயம் ஒன்றை நகர் பகுதியிலுள்ள கல்முனைவீதியில் அமைத்துள்ளார். இந்நிலையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று தருவதாக ஒருவரிடம் 4 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவை வாங்கி சுற்றலா விசாவில் கட்டார் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அங்கு வேலைக்கு என்று சென்றவர் அறை ஒன்றில் தங்கவைத்த நிலையில் வாடகை பணத்தைச் செலுத்தாததால் அவர் அறையில் இருந்து வெளியேற்றப்பட்டார். இந்நிலையில், தனக்கு வேலை வாய்ப்பு பெற்று தருவதாகத் தெரிவித்து சுற்றுலா விசாவில் அனுப்பி வைத்துள்ளமை தெரியவந்ததையடுத்து அங்கிருந்து விமான மூலம் நாட்டுக்கு திரும்பிவந்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸார்விசாரணையில்சம்பவதினமான செவ்வாய்க்கிழமை மூதூரைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவரைக் கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து வேறு ஒரு நப ரின் கடவுச் சீட்டையும் கைப்பற்றினர்.

இதில் கைது செய்தவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மட்டுதலைமையகபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

# வட்ஸ் அப்பில் காதலால் சிறுமி துஷ்பிரயோகம்

**சந்தேக நபருக்கு வலை வீச்சு**

வட்ஸ் அப் மூலம் ஏற்பட்ட நட்பினால் 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் தேடப்பட்டு வருகிறார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது -

கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமி ஒருவருடன் அம்பலாந்தோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் வட்ஸ் அப் மூலம் காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது. சிறிது காலம் மேற்படி வட்ஸ் அப் காதல் நீடித்துள்ளது.

அண்மையில் மேற்படி சிறுமியை நேரடியாக சந்திக்கவந்தஅம்பலாந்தோட்டை நபர், சிறுமியை ஏமாற்றி கண்டி கெட்டம்பே பகுதியில் உள்ள ஓர் உல்லாச விடுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு சிறுமியைப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் அந்நபர் தலைமறைவாகி உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி கண்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் தேடப்பட்டு வருகிறார். பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைகளுக்காக கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கண்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மின் பாவனை குறைந்தது

மின்சாரப் பாவனை சுமார்20வீதத்தால்குறைவடைந்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டண உயர்வை அடுத்தே மின்சாரப் பாவனை சுமார் 20 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நல்லூர் பிரதேச சபையில் கேள்வி கோரலில் குழப்பம்

யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேசசபையில் இடம்பெற்ற கேள்வி கோரலின் போது குழப்பம் ஏற்பட்டதை அடுத்து, பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையினரால், பாவிக்கப்பட்ட பொருள்கள் புதன்கிழமை ஏலம் விடப்பட்டது.

அதன் போது ஏலம் எடுக்க வந்த சிலர் பிரதேச சபையினருடன் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

அதனை அடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸார் அங்குசென்றுநிலைமையை கட்டுப்படுத்தினர்.

# பாலியல் குற்றச்சாட்டில் கைதானோருக்கு பிணை

**அவர்களில் ஒருவர் முகாமையாளர்**

காப்புறுதிநிறுவனம்ஒன்றின் ஊழியர்கள் மூவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டுசந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமையவே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 45 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்களில் ஒருவர் நிறுவனத்தின் பொது முகாமையாளர் என குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில் சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை புத்தளம்நீதவான்நீதின்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏல விற்பனை
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது172) பெற்று அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 03.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 2 | பிரதேச செயலகம் கரவெட்டி | 03.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ கரவெட்டி |
| 3 | பிரதேச செயலகம் தெல்லிப்பளை | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 4 | பிரதேச செயலகம் உடுவில் | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 10.30 | பி.செ உடுவில் |
| 5 | பிரதேச செயலகம் கோப்பாய் | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.30 | பி.செ கோப்பாய் |
| 6 | பிரதேச செயலகம் நெடுந்தீவு | 04.04.2023(செவ்வாய்க்கிழமை) | பி.ப 02.00 | பி.செ நெடுந்தீவு |
| 7 | பிரதேச செயலகம் காரைநகர் | 06.04.2023(வியாழக்கிழமை) | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 8 | பிரதேச செயலகம் சங்கானை, சண்டிலிப்பாய் | 06.04.2023(வியாழக்கிழமை) | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 09 | தகவல் தொழில்நுட்ப பூங்கா | 10.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 09.30 | தகவல் தொழில்நுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ சங்க கட்டடம் |
| 10 | பிரதேச செயலகம் வேலணை | 10.04.2023(திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ வேலணை |
| 11 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 11.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 12 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 11.04.2023(செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.30 | பி.செ சாவகச்சேரி |
| 13 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 12.04.2023(புதன் கிழமை) | மு.ப 09.30 | பழைய யாழ் பி.செயலக கட்டடம் |
| 14 | பிரதேச செயலகம் நல்லூர் | 12.04.2023(புதன் கிழமை) | பி.ப 02.30 | பி.செ நல்லூர் |
| 15 | மாவட்டச் செயலகம்-யாழ்ப்பாணம் | 20.04.2023(வியாழக்கிழமை) | மு.ப 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

**அ.சிவபாலசுந்தரன்**
**அரசாங்க அதிபர்**
**யாழ்மாவட்டம்**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 15 புதன்கிழமை 29.03.2023 கதிர் 12

## இன்னும் 12 ஆண்டுகளுக்கு ரணிலின் ஆட்சி தேவையாம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த உலகத் தலைவர். அவர் எமது நாட்டுக்குக் கிடைத்த மிகப்பெரிய சொத்து. இன்னும் 12 ஆண்டுகள் வரை அவரிடம் ஆட்சியை ஒப்படைத்தால் இலங்கை உச்ச நிலைக்கு வரும். இதை மக்கள் தற்போது புரிந்து 2

## நீதிமன்றத்திலிருந்து கைதி தப்பியோட்டம்

30 வழக்குகளுடன் தொடர்புடையவர்



நீதிமன்ற வளாகத்திலிருந்து சிறைச்சாலைக் கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

பத்தேகம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமான போதே காலி சிறைச்சாலையின் கைதி தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த கைதி நீதிமன்ற அறையின் யன்னல் வழியாகத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் திருட்டுக் குற்றச்சாட்டில் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் மீது போதைப்பொருள் தொடர்பான சுமார் 30 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தப்பியோடிய கைதியைக் கைதுசெய்ய 5 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

# பௌத்த மயமாக்கலை எதிர்த்து நெடுந்தீவில் இன்று போராட்டம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்தியது





யாழ். நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக் கையினை கண்டித்தும், கச்சதீவில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று நண்பகல் நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் நெடுந்தீவு மக்களும் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை தொவித்திருந்தனா. நெடுந்தீவு வெடியரசன் கோட்டையினை தொல்லியல் திணைக்களம் அதனை பௌத்த விகாரையாக அடையாளப்படுத்தி, அதன் வரலாற்றைத் திாபுபடுத்துவதுடன், புதிதாக விகாரையை அங்கு கட்டுவதற்கும் முயற்சித்து வருகின்றது. இதேபோல் கச்சதீவில் அதன் மத அடையாளத்தை மாற்றும் வகையில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதுடன், ஆங்காங்கே அரச மரங்களும் நாட்டப்பட்டிருக்கின்றது.

## மொட்டுவைப் பலப்படுத்த களமிறங்கினார் மஹிந்த

3 மாதங்களுக்குள் இலக்கை அடைவதற்கும் திட்டம் வகுப்பு



நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக அடிமட்டத்தில் வீழ்ந்து கிடக்கும் மொட்டுக் கட்சியைத் தூக்கி நிமிர்த்துவதற்கு மஹிந்த ராஜபக்ச முழு வேகத்தில் இப்போது களமிறங்கியுள்ளார்.

அண்மையில் மொனராகலையில் முதலாவது கூட்டத்தை நடத்திக் கட்சியைப் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கொழும்பு விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தைக் கட்சியைப் பலப்படுத்தும் ஒரு மத்திய நிலையமாக அவர் மாற்றியுள்ளார்.

அந்த வீடு பல கோடி ரூபா செலவில் அண்மையில்தான் புதுப்பிக்கப்பட்டது. அங்கு அமைக்கப்பட்ட மண்டபம் சந்திப்புக்களை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் இருந்த மொட்டு இப்போது 95 எம்.பிக்களை மாத்திரம் கொண்டுள்ளது. அவர்களுள் பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒட்டி நிற்கின்றார்கள். இவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்துப் பிரிந்து சென்ற கட்சியின் ஆதரவாளர்கள் -வாக்காளர்கள் அனைவரையும் மீண்டும் இணைத்துக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் இப்போது மஹிந்த இறங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் கட்சியைப் பலப்படுத்திவிட வேண்டும் என்ற இலக்கைக் கையில் எடுத்துக்கொண்டு மஹிந்த களமிறங்கியுள்ளார் என்று அவரது வட்டாரம் தெரிவிக்கின்றது.

## இந்தியாவினால் நெருக்கடி வரும்

முன்னிலை சோசலிசக் கட்சி எச்சரிக்கை

இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுள்ள கடன்களுக்குப் பதிலாகப் புதுடில்லி 4 விடயங்களைக் கொழும்பிடமிருந்து எதிர்பார்க்கின்றது. அவற்றை இந்த ஆட்சியாளர்கள் நிறைவேற்றவில்லை என்றால் அது எதிர்காலத்தில் நெருக்கடியை ஏற்படுத்தும்.

சர்வசே பெற்றோலிய நிறுவனங்கள் நாட்டுக்குள் வருவது முதலாவது நெருக்கடி என்றால் இந்தியாவுடன் இணங்கிக்கொள்ளப்பட்டுள்ள விடயங்கள் இரண்டாவது நெருக்கடியாக உள்ளதென முன்னிலை சேசலிசக் கட்சியின் ஏற்பாட்டாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

கரந்தெனியவில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச பெற்றோலிய நிறுவனங்கள் இலங்கைக்குள் வருகின்றமையானது, இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை துண்டாடுவதற்கே. இது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள முதலாவது நெருக்கடி.

இந்த நெருக்கடிக்கு அப்பால் இரண்டாவது நெருக்கடியொன்று உள்ளது. அது மிகவும் பாரதூரமானது. அதனை நாம் வெளிப்படுத்துகின்றோம். அதுபற்றி நீங்கள் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும்.

இந்தியாவிடத்திருந்து கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக்கடனை வழங்கிய இந்தியா இலங்கையிடத்தில் நான்கு விடயங்களை கோரியுள்ளது.

அதில் முதலாவது இந்திய நாணயத்தினை இலங்கையில் பரிவர்த்தனை செய்வதற்கான இணக்கம். இதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் ஒப்புதல் வழங்கிவிட்டனர்.

இரண்டாவது கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனை யத்தினை இந்தயாவுக்கு வழங்கும்படி கேட்கப்பட்டுள்ளது. இந்தியாவின் துறைமுகங்கள் ஆறுமாத காலங்கள் மட்டுமே இயத்தில் உள்ளன. ஆகவேதான் வருடம் பூராகவும் இயங்கும் கொழும்புத் துறைமுகத்தினை இந்தியா எதிர்பார்க்கின்றது.

மூன்றாவதாக தனுஷ்கோடியிலிருந்து மன்னாருக்கு பாலம் அமைப்பதற்கு இந்தியா யோசனையை முன் வைத்துள்ளது. இதிகாச வரலாற்றில் இராமர் அமைத்த பாலத்தினை மீண்டும் அமைப்பதே 2

## பொலிஸ் மா அதிபரின் பதவியை நீடிக்க அமைச்சரவை அனுமதி



பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் பதவிக் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான பத்திரத்தை மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். இந்நிலையிலேயே அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு 60 வயது நிறைவடையும் நிலையில் அவர் மார்ச் 26 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் செல்லவிருந்தார்.

அவர் ஓய்வு பெற அனுமதிக்கப்படாமல் அவரது சேவையை மேலும் மூன்று மாத காலங்களுக்கு நீடிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கிணங்க அவர் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் பொலிஸ்மா அதிபர் பதவியை வகிப்பார் என அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

## கழுத்தறுத்து இருவர் படுகொலை

கூரிய ஆயுதத்தால் கழுத்து அறுக்கப்பட்டு இருவர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை – பதல்கும்புர பிரதேசத்தில் செவ்வாய் இரவு இடம்பெற்றது.

தர்மபால விஜயசிறி (வயது 41), ரோஹித குணரட்ன (வயது 38) ஆகியோரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர்.

காணித் தகராறில் இரண்டு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற மோதல் இறுதியில் கொலையில் முடிவடைந்துள்ளது என்று பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கொலையாளி கைது செய்யப்படவில்லை.

## பெற்றோல் மற்றும் டீசல் விலை இன்று நள்ளிரவு முதல் குறைப்பு

அமைச்சர் கஞ்சன அறிவிப்பு

இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரி பொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவித்தார்.

எரிசக்தி அமைச்சில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

92ஒக்டேன்ரகபெற்றோல் ஒரு லீற்றரின் விலை 60 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது. தற்போது 400ரூபாவிற்கு விற்கப்படும் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 340 ரூபாயாக 2

## ஆட்சி மீதானஅதிருப்தியைச் சமாளிக்க மக்கள் காலடியைத் தேடி செல்லவுள்ள எம்.பிக்கள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மக்களுக்கு அதிருப்தி உள்ளதால் நாடாளுமன்றத்தைக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும் வேலைத் திட்டத்தைத் தொடங்கும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற செய்து வருகின்ற வேலைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் அவர்களின் யோசனைகளை உள்வாங்கிச் செயற்படுவதுமே இதன் நோக்கம். இதற்காக மக்களின் காலடிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளாராம். 2

## வரும் மே மாதத்தில் மீண்டும் எரிபொருள் விலை குறையும்

போக்குவரத்துக் கட்டணங்களை குறைக்கவும் கோரிக்கை

எதிர்வரும் மே மாதம் பெற்றோல், டீசலின் விலை மீண்டும் குறைக்கப்படும் என்று எரிசக்தித் துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்திலேயே எரிபொருட்களின் விலைகளைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், ஓரிரு நாட்கள் முன்னதாகவே அதனை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

“பொதுமக்கள் மீண்டும் வரிசைகளில் நிற்பதை தவிர்க்கும் முகமாகவே இந்தச் செயற்பாட்டினை நாம் முன்னெடுத்துள்ளோம். அந்த வகையில் இன்று நள்ளிரவு முதல் பொதுமக்கள் குறைந்த விலையில் தமக்குத் தேவையான எரிபொருளை நிரப்பிக்கொள்ள முடியும்.

இதேவேளை, எதிர்வரும் மே மாதமும் எரிபொருட்களின் விலைகள் மீளாய்வு செய்யப்பட்டு குறைக்கப்படவுள்ளன. அதற்கிடையில் எவ்விதமான மாற்றங்களையும் நாம் செய்யப்போவதில்லை.

இந்நிலையில், தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர் சங்கத்தினர், முச்சக்கர சாரதிகள் சங்கத்தினர் மற்றும் இதர வாடகை வாகன செலுத்துநர்கள் தமது கிலோ மீற்றருக்கான கட்டணங்களை திருத்துமாறு கோரிக்கை விடுகின்றேன்.

ஏற்கனவே எரிபொருளின் விலை குறைக்கப்பட்ட போதும் போக்குவரத்துக் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை. அப்போது குறைக்கப்பட்ட தொகை 2

## மாதகலில் சிக்கியது 150 கிலோ கஞ்சா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் செவ்வாயிரவு 150 கிலோ கஞ்சாவைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டு மாதகலில் இறக்கி 2

# எல்லை மீள்நிர்ணய நடவடிக்கையை மீள் பரிசீலனை செய்யவேண்டும்

## சமத்துவக் கட்சி வலியுறுத்து

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பான பிரேரணைகள் மாவட்ட செயலர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவொன்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட குழுக்கள் எவற்றிலும் மக்கள் அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், அல்லது பொதுமக்களை பிரதிநிதித்து வம் செய்யும் அரசியற் கட்சிகள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டு, தங்களின் எஜமானர்களைத் திருப்திசெய்யும் பிரேரணைகள், மாவட்ட செயலர்கள் அடங்கிய குழுவினரால் மிகவும் நுட்பமான வகையில் உள்சேர்க்கப்பட்டிருக்கின்றன.

எனவே இது மீள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும் என சமத்துவக் கட்சி, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு கடிதம் ஒன்றை கையளித்துள்ளது.

மேற்படி கடிதம் நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேரடியாக சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளர், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரால் நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கள யதார்த்தையும் சமூக கட்டமைப்புகளையும் கருத்தில் கொள்ளாமல், வெறும் மூடிய அறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன்மொழிவுகள், சமூக இயங்கியலை, அதன் ஒருங்கிசைவை எவ்வாறு அழிவுக்கு இட்டு செல்லும் என்பது ஆராயப்பட்டிருக்கப் படவில்லை. முற்றிலும் பொருத்தமற்ற ஆளணியின ரைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் மேற்படி முன்வரைவுகள், சமூக வளர்ச்சியில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்ற அச்சம் சமத்துவ கட்சி அடங்கலான அனைத்து அரசியல் கட்சியினருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய எல்லை நிர்ணயத்தின் மூலம் பல பிரதேசங்களில் (வட்டாரங்களில்) சமூகப் பிளவுகள் ஏற்படக்கூடிய நிலை ஏற்படுவதற்கான சூழலே அதிகமாகக் காணப்படுகிறது. அது மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த வட்டார எல்லைகளை விரித்து அகலமாக்கும்போது குறித்த பிரதேசங்களில் (கிராம நிலையில் அல்லது கிராமசேவகர் நிலையில்) உரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடியாத நிலை மக்களுக்கு ஏற்படவுள்ளது. இதனால் அபிவிருத்தி தொடக்கம் மக்கள் பிரதிநிதித்துவம் வரை யில் ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும். ஆகவே இது சமூகப் பிளவுகளை ஆழமாக உண்டாக்கும்.

புதிய வட்டார எல்லைகளிற் பலவும் பொருத்தப்பாடற் றவையாகக் காணப்படுகின்றன. இதனை மீள்பார்வைக்குட் படுத்த வேண்டும். இவ்வாறு வகுக்கப்படுமிடத்து அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கும் சபையில் உரிய பிரதேசங்களின் குரலை ஒலிப்பதற்கும் நெருக்கடிகளே அதிகமாக இருக்கும். இதுவும் சமூகக் கொந்தளிப்பை உண்டாக்கும்.

மேலும், கடந்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தங்களுக்கும், சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதி களுக்கும் இடையில், உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக நடைபெற்ற சந்திப்பொன்றின்போது, கட்சிகளின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என்று தாங்கள் வழங்கிய வாக்குறுதியை தற்போது நினைவுபடுத்த விரும்புகிறேன்.


மேற்படி சந்திப்பின்போது, தற்போதுள்ள தேர்தல் முறைகளிலும் உறுப்பினர் எண்ணிக்கையிலும் ஏற்படக்கூடிய எந்தவொரு மாற்றமும், இலங்கையில் வாழக்கூடிய சிறுபான்மை சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் புதிய தேர்தல் முறையொன்றின்கீழ் குறைந்தளவு எண்ணிக்கையில் உறுப்பினர் தேர்வு இடம்பெறுமாயின் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் சமுதாயங்கள் மேலும் புறக்கணிக்கப்படும் அபாயம் இருப்பதையும் ஒருமனதோடு சுட்டிக்காட்டியிருந்தார்கள். அத்துடன், விகிதாசார பிரதிநிதித்துவ முறை மட்டுமே இலங்கை போன்ற பன்முக சமுதாயங்கள் வாழக்கூடிய நாட்டுக்குப் பொருத்தமானதும் சரியானதும் ஆகும் என் பதும் அந்த சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆகவே. இவை போன்ற வரலாற்றுத் தவறுகள் எமது நாட்டில் மேலும் சமூக நெருக்கடியையும் பிரச்சினைகளையும் உருவாக்குமே தவிர, சுமுகமான சூழலை உருவாக்காது. நமது நாடு பிரச்சினைகளிலிருந்து மீள வேண்டியுள்ளது. அதற்கு அதிகாரப் பரவலாக்கம் மிகமிக அவசியமானது. அதைக் குறித்து சிந்திப்பதே மிகத் தேவையானதாகும். – என்றுள்ளது.

# உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை ஹோட்டல்களில் சோதனை!







தேசிய உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஊடாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர்.எம்.அஸ்மி தலைமையிலான பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உணவு பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் பௌஸாத், மேற்பார்வை பொதுச்செயலாளர் பரிசோதகர் ஏ.எம்.பாறுக் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதனை குழு மருதமுனை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல்களை சுற்றி வளைத்து உணவு பாதுகாப்பு தொடர்பான பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதன் போது உணவு பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக காணப்பட்ட மூன்று ஹோட்டல்களின் உரிமையாளர்களுக்கு எதிராக கல்முனை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தற்போது முஸ்லிம்களின் புனித ரமலான் காலம் என்பதால் பள்ளிவாசல்கள், ஹோட்டல்களில் மாலைநேரங்களில் உணவு பண்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இங்கு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு உகந்த உணவுகள் உற்பத்தி செய்யப்படுகின்றனவா? பண்டங்களின் சேர்மானங்கள், கலவைகள் தொடர்பாகவும் நஞ்சுத் தன்மையற்ற உணவு உற்பத்தி தொடர்பிலும் இங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன

ஹோட்டல் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதோடு சில கடை உரிமையாளர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதனைகளால் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத கடை உரிமையாளர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் இதன் போது தெரிவித்தனர்.

### யாழ், கிழக்கு பல்கலைக்கழகங்களில்

## சித்த மருத்துவப் பிரிவுகள் பீடங்களாகத் தரமுயர்வு

### அமைச்சரவை அனுமதி!

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் திருகோணமலை வளாகத்தில் தற்போது காணப்படுகின்ற சித்த மருத்துவ பிரிவுகளை தரமுயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் தற்போது காணப்படுகின்ற சித்த மருத்துவ பிரிவுகளைப் பீடங்களாகத் தரமுயர்த்துதல் தொடர்பில் பெப்ரவரி 6 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அதற்காக போதியளவு கல்வி மற்றும் ஊழியர்கள் வசதிகள் உள்ளனவா என்பதை ஆராய்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, சித்த மருத்துவ பிரிவுகளைப் பீடங்களாக மாற்றம் செய்வதற்குப் போதுமானளவு மனிதவளம் மற்றும் பௌதீக வளங்கள் காணப்படுகின்றன என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

கல்வி அமைச்சர் சமர்ப்பித்த குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு சித்த மருத்துப் பிரிவுகளை, பீடங்களாகத் தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளனர். குறுகிய காலப்பகுதிக்குள் ரணில் விக்கிரமசிங்க பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை முன்னோக்கி செல்லவேண்டுமானால் தேசிய இணக்கப்பாடு அவசியம். அந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள கட்சிகள் முன்வரவேண்டும்.

ஏனெனில் இலங்கையில் இனியும் தனிக்கட்சி ஆட்சி முறை ஏற்புடையதாக இருக்காது. எந்தக் கட்சியாக இருந்தாலும் நிலைமை இதுதான். தேசிய இணக்கப்பாடு இருந்தால் மட்டுமே இலங்கையால் ஆசியாவில் சிறந்த நிலைமைக்கு வர முடியும். அவ்வாறு இல்லாமல் அரசியல் நோக்கிச் செயற்பட்டால் கீழ் நோக்கித்தான் செல்லவேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் அல்ல, நாட்டை மீட்டெடுப்பதே முக்கியம். அதற்கான வேலைத் திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, காலைவாரும் அரசியலைச் செய்யாதிருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் எமது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வார் – என்றார்.

## மாதகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்த சமயமே கடற்படையினர் இந்தக் கஞ்சாவைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கஞ்சா சிக்கியபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்கரையில் பற்றைக்குள் மறைக்கப்பட்ட நிலையில் இந்தக் கஞ்சா மீட்கப்பட்டது என்று தெரிவித்த கடற்படையினர் அதன் அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஓர் படகையும் கைப்பற்றியதாகத் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் சந்தைப் பெறுமதி 54 மில்லியன ரூபா என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மக்கள் காலடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான வேலைத்திட்டத்தை வரையும் பொறுப்பை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி வருகின்ற சித்திரைப் புதுவருடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கல்விமான்களையும் ஒன்றிணைத்துக் களமிறக்குவதற்காக வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகின்றார் அமைச்சர் பிரசன்ன.

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்படவுள்ளது. 95 ஒக்டேன் ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 135 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது. தற்போது 510 ரூபாவிற்கு விற்கப்படும் ஒரு லீற்றர் பெட்ரோலின் புதிய விலை 375 ரூபாயாக அமையவுள்ளது.

ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 80 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 325 ரூபாயாக அமையவுள்ளது.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 510 ரூபாவிலிருந்து 465 ரூபா வரை குறைக்கப்படவுள்ளது. 305 ரூபாவிற்கு விற்கப்பட்டும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 295 ரூபாவிற்கு விற்கப்படவுள்ளது – என்றார்.

## வரும் மே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுமானதாக இல்லை என்று எமக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் காரணம் கூறினார்கள். தற்போது, மீண்டும் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் தமது கட்டணங்களை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும்" என்றார்.

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றைக் கண்டித்தே இன்றைய போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும், பொதுமக்களும் இணைந்து வெடியரசன் கோட்டையினைப் பார்வையிட்டதுடன், அங்கு காலை சிறிது நேரம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினையும் நடத்தியிருக்கின்றனர்.

இன்றைய போராட்டம் காரணமாக யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளில் இருந்து மேலதிக பொலிஸார் நெடுந்தீவுக்கு கொண்டுவரப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்ததை காணக்கூடியதாக உள்ளது.

## இந்தியாவினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் யோசனையாகும்.

நான்காவது யோசனை இந்தியாவின் எரிபொருள் கட்டமைப்பையும் இலங்கையின் எரிபொருள் கட்டமைப்பையும் இணைப்பதாகும்.

இவற்றையெல்லாம் ஏற்கவேண்டிய கட்டாயத்தில் இலங்கை ஆட்சியாளர்கள் உள்ளனர். ஆகவே இந்த நெருக்கடிகளிலிருந்து வெளிவரவேண்டுமாக இருந்தால் தேர்தல் வரும்வரையில் காத்திருக்க முடியாது. அதற்கு முன்னதாகவே பொது மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் – என்றார்.

# நீர் வளங்கல் சார் ஆய்வு களப்பயணம்









நல்லூர் பிரதேச நீர் வளங்கள் சார் களப்பயணம் கடந்த சனிக்கிழமை பேராசிரியர் எஸ். சிறீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

களப்பயணத்தின் போது அரியாலை நீர்நொச்சித் தாழ்வுக் குளம் , பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடனான நீர் சார்ந்த உரையாடல், நல்லூர் லிங்கம் கூழ் பாரில் ஐஸ்கிறீம் தயாரிப்பில் நீரின் பயன்பாடு குறித்தும் , கோண்டாவில் குடிநீர் விநியோக நிலையம், யாழ்.பல்கலைக்கழக கோண்டாவில் மாணவர் விடுதியில் கழிவு நீர் பயன்பாடு போன்றன குறித்தும் ஆய்வுக் களப்பணி இடம்பெற்றது.

இக் கள ஆய்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெஸ்பர் செயற்றிட்டம் ஊடாக உருவாகிய வடக்கின் நீர் உரையாடல் மன்றம் மற்றும் நீர் தொழில்முறை வடக்கு என்பன இணைந்து ஒழுங்கமைத்திருந்தன.

குறித்த களப்பயணத்தில் நீர் சார்ந்த துறைமையாளர்கள், மாணவர்கள். சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன் நல்லூர் பிரதேச செயலக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான விசேட கருத்தாடல் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பேரினவாதத்தின் திட்டமிட்ட தமிழின அழிப்புக்கு பதவியில் தொடரும் ஆசையில் ஆளுநரும் துணை

## மக்கள் முன்னணி தலைவர்களில் ஒருவரான செ.கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

வடக்கு ஆளுனர் ஜீவன் தியாகராஜா தனது ஆளுநர் பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக பேரினவாதத்தின் தமிழர் மீதான திட்மிட்ட இனவழிப்பிற்கு துணைபோகிறார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த நாவலர் கலா சார மண்டபத்தை வடக்கு மாகாண ஆளுநர் மத்திய அரசின் திணைக்களத்தின் கீழ் வழங்கியதற்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியி னால் ஆளுநர் அலுவ லகத்திற்கு முன்னால் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத்தெரிவித்தார் என்று அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. .

அவர் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய நாவலர் கலாசார மண்டபம் என்பது தமிழர்களுடைய பூர்வீக அடையாளங்களில் ஒன்று. அந்த வரலாற்று அடையாளத்தை புத்தசாசன அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களமொன்றிற்கு வழங்கு வதன் மூலமாக படிப்படியாக சிங்கள பௌத்த ஆதிக்கத்தினுடைய விரிவாக்கத்திற்கு உதவுகின்ற நோக்கத்தோடு வடக்கு ஆளுநர் எதேச்சாதிகாரமாக முடிவெடுத்து அதனை மத்திய அரசிற்கு வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அவருடைய இந்த எதேச் சதிகார நடவடிக்கைக்கு எதிர்ப் புத்தெரிவித்து இங்கேகவனயீர்ப்புபோராட்டமொன்று நடத்தினோம்

ஆளுநருடைய இந்ததான்தோன்றித்தனமான, இனவாதத்திற்கு எடுபிடித்தமான நடவடிக்கையை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர் தன்னை ஒரு தமிழனாகக் கூறிக்கொள்கின்ற பொழுதிலும் ஓர் இனத்தினுடைய கருவை அறுத்து இனத்தினுடைய குரல்வளையை நசுக்கி இனத்தினுடைய குருதியிலும் அவலத்திலும் பதவி சுகத்தை அனுபவிப்பதற்காக மீண்டும் ரணிலுடைய பாதங்களை கழுவி பணிவிடை செய்து, பேரினவாதத்தை திருப்திப்படுத்திப்படுத்தி மிண்டும் இந்த பதவியில் நீடிக்க முயல்கிறார். அதை நாங்கள் மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம்.

தமிழ் மக்களை கொதித்தெழ வைத்து, மீண்டும் வீதிகளில் இறங்கி போராடுகின்ற நிலைமைக்குத்தான் இந்த ஆட்சி தள்ளிக்கொண்டிருக்கிறது. போர் முடிந்து 13 ஆண்டுகளுக்குப் பின்னரும் இதுதான் நிலைமை.

தமிழ்த்தரப்பில் இருந்து கொண்டு அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தை தொடக்கப் புள்ளியாக கொள்ளுவோம் என்று சொல்லுகின்ற இந்திய அடிமைகள் இந்த விடயங்களைக் கண்டுகொள்வது கிடையாது. ஆளுநர் இந்தமாதிரியான அழிவு நடவடிக்கைகளைச் செய்கின்றபொழுது அந்த இந்தியக் கூலிகள் எங்கே ஒழித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

இந்தச் செயல்பாடுகளை ஆளுநர் உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லை என்று சொன்னால் மக்கள் பெருமளவில் திரண்டு ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராடுகின்ற நிலைமை ஏற்படும்.

மத்திய அரசினுடைய அரச இயந்திரங்களாக இருக்கக்கூடிய புத்தசாசன அமைச்சு, தொல்பொருள் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் உள்ளிட்ட சகல திணைக்களங்களும் வடக்கு கிழக்கிலே ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. அது போன்றே மகாபலி அபிவிருத்தி அதிகார சபையும் வடக்கு கிழக்கிலே ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைதான் முன்னெடுத்துக் கொண்டிருக்கின் றது.

மட்டக்களப்பிலே மாதுருஓயா வலது கரை அபிவிருத்தி திட்டம் என்ற பொயரிலே மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் பெரும் சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்வதற் காக 3 லட்சம் மாடுகள் பராமரிக்கப்பட்டு வந்த மயிலத்தமடு மாதவனைப் பகுதிகளிலிருந்த தமிழ்ப்பண் ணையாளர்கள் கடந்த இரண்டு வருடங்களாக திட்டமிட்டு விரட்டப்படுகிறார்கள்.

முல்லைத்தீவில் கடந்தவாரம் எங்களுடைய விவசாயிகள் தாக்கப்பட்டுஅவர்களுடைய நிலங்கள் மகாவலியின் ஒத்துழைப்போடு பேரனவாதிகளால் கையகப்படுத்தப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தாயகத்தில் தமிழர்கள் மீது இவ்வாறு அட்டூழியங்கள் நிகழ்த்தப் பட்டுக்கொண்டிருக்க, 13ஆம் திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பதவிக்கு வந்த ஆளுநர் ஒரு தமிழனாக இருந்தும் பேரினவாதத்தை திருப்திப்படுத்துவதற்காக , இந்த இனவழிப்பு செயற்பாடுகளுக்கு துணைபோவது வேதனைக்குரியது – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## பதவியுயர்வு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அரசியல் ஆலோசகராகச் செயற்பட்ட பாணு பிரகாஷ் தென்னாபிரிக்காவுக்கான பிரதிஉயர்ஸ்தானிகராக பதவி உயர்வு பெற்றுச் செல்லவுள்ளார். 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையின் இந்திய உயர் ஸ்தானிகரகத்தில் அரசியல் பிரிவு ஆலோசகராக பதவி யேற்றுக் கொண்ட அவர் கடந்த மூன்று ஆண்டுகளாக அந்தப் பதவியில் கடமையாற்றியிருந்தார்.

2006 ஆம் ஆண்டு இந்திய இராஜதந்திர சேவையில் இணைந்து கொண்ட அவர் தனது 17 வருட சேவைக் காலத்தில் அடையும் அதியுயர்ந்த பதவியாக மேற்படி பிரதி உயர்ஸ்தானிகர் பதவி காணப்படுகின்றது.

இவ்வார இறுதியில் அவர் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லவுள்ளதுடன் தென்னாபிரிக்கத் தலைநகர் பிரிட்டோரியாவில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் அடுத்தவாரம் பிரதி உயர்ஸ்தானிகர் பதவியை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச வெசாக் உற்சவத்தை புத்தளத்தில் நடத்த முடிவு

மஹாநாயக்க தேரர்கள் மற்றும்ஒட்டுமொத்த இலங்கை பௌத்த சமாசங்களின் பரிந்துரைகளுக்கமைய 2023 (புனித பௌத்த வருடம் 2567) அரச வெசாக் உற்சவத்தை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு மற்றும்பௌத்த விவகாரங்கள் திணைக்களமும் இணைந்து புத்தளம் மாவட்டத்தின் சிலாபம், மாதம்பே கெபல்லாவெல ஸ்ரீரத்னசிறி பிரிவெனா விகாரையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய மே 02 ஆம் திகதி தொடக்கம் 08 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்துவதற்கும், அதற்கு இணையாக பல்வேறு சமய மற்றும் கலாசாரநிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசாரவிவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கோட்டாவை ஜனாதிபதியாக நியமித்தமை மிகத் தவறானது

## இப்போது கூறுகின்றார் ராஜபக்சக்களின் சகா




கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக நியமிக்க எடுத்த முடிவு மிகத் தவறானது என்று ராஜபக்சக்களின் சகாவான நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன பகிரங்கமாகத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதிப் பதவிக்கு ரணில் விக்கிரசிங்கவை நியமிப்பதற்கு ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்த முடிவு சரியானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அந்த முடிவுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

# ஐ.எம்.எப். கடன் உதவியால் இலங்கைக்குப் பேராபத்து

## ஜே.வி.பி. பகிரங்க எச்சரிக்கை




சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மிகவும் பயங்கரமானது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்ற எந்தவொரு நாடும் முன்னேறியது கிடையாது. ஏனெனில் அந்த நிபந்தனைகள் மிகவும் மோசமானவை.

இவ்வாறு ஜே.வி.பி. பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைத்த கடனைச் சிலர் புதையல் கிடைத்துவிட்டது போல் கருதுகின்றனர். சர்வதேச நாணய நிதியக் கடன் என்பது பயங்கரமானது. இந்த உண்மை தெரிந்திருந்தால் பட்டாசு கொளுத்தியிருக்கமாட்டார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்ற எந்தவொரு நாடும் முன்னேறியது கிடையாது. பணவீக்கம் அதிகரிப்பு, கடனை மீளச் செலுத்தமுடியாமை உள்ளிட்ட விடயங்களால் பாதிக்கப்பட்டிருந்த நாடொன்று சர்வதேச நாணய நிதியக் கடனால் எங்கும் மீண்டுள்ளதா?

நாடொன்று தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள மிக மோசமான நிபந்தனைகளே, இலங்கை விடயத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளன – என்றார்.

# பொறுப்பதிகாரி உட்பட இரு பொலிஸாரின் மறியல் நீடிப்பு

## கஞ்சா கடத்தும்போது கைதானவர்கள் என்று

கிளிநொச்சி மாவட்டம் பளைப் பகுதியில் மதுவரித் திணைக்களத்தின் விசேட நடவடிக்கை பிரிவினரால் கஞ்சா வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு பொலிஸாரினதும் பிணை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு ஏப்ரல் 6 வரை விளக்கமறியல் நீடிக்கப் பட்டது. கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்து. பளை போலீஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் அலுவலர் ஆகியோர் பெப்ரவரி 22 கைது செய்யப்பட்டனர். கஞ்சா கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் இருவரையும் கொழும்பிலிருந்து வருகை தந்த மது வரி திணைக்களத்தின் விசேட நடவடிக்கை பிரிவினர் இரவு 8 மணியளவில் கைது செய்தனர்.

சான்றுப் பொருளுடன் நேரடியாக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட இருவரும் கடுவல நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு மார்ச் 28 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களது மறியல் காலமே நீடிக்கப்பட்டுள்ளது.

# வெடுக்குநாறிமலை ஆலய அழிப்பை எதிர்த்து நேற்று நல்லூரில் ஆர்ப்பாட்டம்







வெடுக்குநாறி மலையில் அமைந்திருந்த ஆதி லிங்கம் உடைக்கப்பட்டமையைக் கண்டித்து செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

நல்லூர் – நல்லை ஆதினம் முன்பாக சைவ மகா சபையின் ஏற்பாட்டில் பிற்பகல் 3 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சைவமகாசபை பொதுச் செயலாளர் வைத்தியர் பரா.நந்தகுமார், மத குருமார்கள், அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நட்டமடைந்த அரச நிறுவனங்களை மறுசீரமைக்காமல் இருக்க முடியாது

## தாரக பாலசூரிய கருத்து



பொருளாதார மீட்சிக்கான பாதையை மாத்திரம் சர்வதேச நாணய நிதியம் காண்பித்துள்ளது, தற்போது இலாபமடைவதற்காக காலம் காலமாக நட்டமடைந்த அரச நிறுவனங்களை மறுசீரமைக்காமல் இருக்க முடியாது.

தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் நிச்சயம் மறுசீரமைக்கப்படும் என வெளிவிவகாரத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேசநாணயநிதியத்தின் முதல் தவணை நிதியுதவி கிடைத்தைத் தொடர்ந்து பொருளாதார பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என அரசாங்கம் குறிப்பிடவில்லை. பொருளாதார மீட்சிக்கான பாதையை மாத்திரம் சர்வதேச நாணய நிதியம் காண்பித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் பரிந்துரை செய்துள்ள 10 பிரதான நிபந்தனைகளை தாராளமாக நிறைவேற்றலாம்.

நாட்டுக்கு பொருத்தமான சிறந்த நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாடு என்ற ரீதியில் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் கடுமையாக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டவுடன் தொழிற்சங்கத்தினர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார்கள். காலம் காலமாக இவ்வாறான போராட்டங்களால் தேசிய வளங்களின் உச்ச பயனை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை புனரமைக்கும் பணிகளை முன்னெடுக்கும் பொறுப்பை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கும் போது அதனை தேசத்துரோக செயற்பாடு என குறிப்பிட்டுக் கொண்டு எதிர்ப்புகள் தெரிவிக்கப்படும், இவ்வாறான போராட்டங்களால் முன்னேற்றமடைய முடியாத நிலை காணப்படுகிறது.

தற்போது இலாபமடையும் காரணத்துக்காக பெற்றோலிய கூட்டுத்தாபனம், டெலிகொம் ஆகிய நிறுவனங்களை மறுசீரமைக்காமல் இருக்க முடியாது. ஏனெனில் இந்த நிறுவனங்களை காலம் காலமாக நட்டமடைந்துள்ளன. ஆகவே, நிலையான மாற்றத்துக்கு நட்டமடையும் அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும். –என்றார்.

# இலங்கையில் திட்டமிட்ட அடக்குமுறை

## சர்வதேச மன்னிப்புச் சபை மூத்த இயக்குநர் தெரிவிப்பு

இலங்கையில் திட்டமிட்ட முறையில் அடக்குமுறைகள் இடம் பெறுவதாகவும், மனித உரிமைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகுவதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபையின் மூத்த இயக்குனர் டிப்ரோஸ் முச்செனா தெரிவித்தார்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மீது தாக்குதல்களை நடத்தும் செயற்பாடுகளை கைவிடுமாறு தெற்காசியாவில் உள்ள அனைத்து ஆட்சியாளர்களிடத்திலும் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய அறிக்கையை செவ்வாய்க்கிழமை கொழும்பில் வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் 75ஆண்டுகளுக்கு முன்னதாக உருவாக்கப் பட்டுள்ளது.இது அனைத்து மக்களிடமிருந்தும் பிரிக்க முடியாத உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை அங்கீகரிக்கின்றது. உலகளாவிய இயங்குநிலைப் பொருளாதாரம் மற்றும் மாறிவரும் அதிகாரக் கட்டமைப்புக்கள் குழப்பங்களை கட்ட விழ்த்து விடுகின்றன. இதில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை எளிதில் இழக்க நேரிடலாம்.

தெற்காசியா ஒரு நிலையற்றதும், எதிர்வு கூற முடியாததுமான விளிம்பில் இருப்பதால் அனைத்துப் பேச்சு மற்றும் உரையாடல்களின் மையத்தில் உரிமைகளை வெளிப்படைத்தன்மை நிச்சயத்துடன் வைத்திருப்பது முன்னெப்போதும் இல்லாததை விடவும் தற்போது முக்கியமானதாக உள்ளது.

தெற்காசிய நாடுகள் மனித உரிமைச் சட்டத்தினை தேவையின் அடிப்படையில் கபட நாடகங்களுக்கும், கண்துடைப்பு மற்றும் இரட்டை நியாயங்களின் கேளிக்கை பரபரப்புத் தருணங்களுக்காக பயன்படுத்துகின்றன. தெற்காசிய நாடுகளின் ஆட்சியாளர்கள் மனித உரிமை மீறல்களை அவர்களின் பிராந்திய அரசியலுடன் ஒத்துப் போகும்போது மட்டுமே விமர்சிக்கின்றார்கள். ஆனால் அவர்களின் நலன்கள் ஆபத்தில் இருப்பதால் தங்கள் சொந்த வீட்டு வாசலில் நடைபெறும் துஷ்பிரயோகங்களை வாய்மூடிய பார்வையாளர்களாக உள்ளனர்.

இது மனச்சாட்சிக்கு விரோதமானதுஎன்பதோடு உலகளாவியமனிதஉரிமைகள் கட்டமைப்பை குறைமதிப்புக்கு உட்படுத்துகின்றது - என்றார்.

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குறுக்கு வழிகள் தீர்வல்ல

தற்போதைய ஆட்சி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதில் அவற்றைக் குறுக்கு வழியில் கையாள்வதற்கு முயற்சிக்கின்றது. இது பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்தி அவற்றைப் பூதாகாரப்படுத்துமே தவிர குறைக்கவோ தீர்க்கவோ உதவாது.

கடைசியாக இந்த மலிமான உத்தியை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் தொழிற்சங்கப்போராட்டத்தின்மீதும்ஆட்சியாளர்கள் பயன்படுத்திப் பார்க்கிறார்கள் என்பது வேதனையானது. அவர்களின் அச்சமும், சந்தேகமும் நியாயமான வழியில் தீர்க்கப்படவேண்டும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை முதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதித்துள்ளனர். அதனால் பெற்றோலியப் பொருட்களின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபன ஊழியர்கள் முதலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், அத்தகைய போராட்டங்களுக்கு இந்த ஆட்சியில் அறவே மதிப்புக் கிடையாது என்பதை விரைவிலேயே புரிந்துகொண்டு தொழிற்சங்கப் போராட்டத்திற்கு மாறிவிட்டனர். அழுத்தி அடித்தால் தவிர இந்த ஆட்சியாளர்களின் செவிப் பறைகளில் எந்தவொரு விடயமும் ஏறாது என்பதை அவர்கள் உணர்ந்துவிட்டதால் தொழிற்சங்க நடவடிக்கை மூலம் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தினர்.

பெற்றோலிய விநியோகத்தை ஏற்கனவே அத்தியாவசிய சேவையாக ஆட்சியாளர்கள் அறிவித்திருப்பதால், தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை பாயும் என்கிற வகையில் மிரட்டிப் பார்க்கின்றது அரசு. ஊழியர்கள் அதற்கும் மசிவதாக இல்லை என்கிற நிலையில் பெற்றோலியப் பொருட்களின் விலையை இன்று நள்ளிரவு முதல் குறைப்பதாக அறிவித்துள்ளது.

ஊழியர்களின் போராட்டத்தால் பெற்றோல் விநியோகம் பாதிக்கப்படப் போகின்றது என்கிற அச்சம் மக்களிடம் எழுந்ததும் அவர்கள் எரிபொருளைப் பெற்றுப் பதுக்க முயற்சிப்பார்கள், அதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையும் நெருக்கடியும் ஏற்படும் என்தைப் புரிந்துகொண்டு அந்த நிலையைத் தவிர்ப்பதற்காகவே விலையை இன்று நள்ளிரவு முதல் குறைப்பதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். இதன் மூலம் நாளைவரை மக்கள் எரிபொருள் வாங்குவதை ஒத்திப்போடுவார்கள் என்பதே ஆட்சியாளர்களின் கணிப்பு. இதன் மூலம் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியை ஆட்சியாளர்கள் தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ளனர்.

ஆனால், இது பிரச்சினைக்கான தீர்வு அல்ல. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்த ஆட்சியாளர்கள் எடுக்கும் நடவடிக்கையைக் கண்டித்தே தொழிற்சங்க நடவடிக்கையில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். பெற்றோல், டீசல் விலையைக் குறைப்பதன் மூலம் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுடன் நேர்மையான பேச்சுக்களை நடத்தி அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

ஆட்சியாளர்கள் தமது குறுக்கு அணுகுமுறைகள் மூலம் தற்காலிக நிவாரணத்தைப் பெற்றாலும் நிரந்தரத் தீர்வுக்காக அவர்கள் ஊழியர்களுடன் பேச்சு நடத்தியே ஆகவேண்டும்.

# இலாபமடைகின்ற அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதன் பின்னணி என்ன?

## சரித ஹேரத் கேள்வி



அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதன் பின்னணி என்ன? அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் வழிமுறை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தன்னிச்சையான முறையில் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தினால் பாரிய விளைவுகளை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டது. நாடு வழமைக்கு திரும்பி விட்டது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகிறார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதியை விடுவிக்குமாறு குறிப்பிட்டால் நாடு வங்குரோத்து, தேர்தல் இல்லை என்று குறிப்பிட்டால் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டது என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விவகாரத்தில் நாடு வங்குரோத்து நிலையில் இல்லை, ஆளும் தரப்பே வங்குரோத்து நிலை யில் உள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு இலங்கை இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளது,

ஆனால்நாடுமுன்னேற்றமடைய வில்லை. நல்லாட்சி அரசாங்கம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான இரு அரசாங்கங்களால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்பதை ஆளும் தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளோம், ஆகவே இனி பிரச்சினையில்லை என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது, நாடு என்ற ரீதியில் இனி தான் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். கடன் மறுசீரமைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, ஆகவே கட்டாயம் கடன் மறுசீரமைக்கப்பட வேண்டும்.


அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் நட்டமடையும் அரச நிறுவனங்களை விடுத்து இலாபமடையும் அரச நிறுவனங்களைத் தனியார் மயப் படுத்த அவதானம் செலுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்தை அரசாங்கத்தால் தொடர்ந்து நிர்வகிக்க முடியாது என கோப் குழுவின் தலைவராக மூன்று அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளேன். பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை ஆகிய–வற்றை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் அவதானத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் தீர்மானத்தை ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை மாத்திரம் எடுக்க முடியாது, ஏனெனில் இந்த ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் மக்களாணை கிடையாது, ஆகவே மறுசீரமைக்கும் நிறுவனங்கள் தொடர்பான தீர்மானத்தை நாடாளுமன்றம் எடுக்க வேண்டும். லிற்றோ நிறுவனம், காப்புறுதி நிறுவனம், ரெலிகொம் நிறுவனம் ஆகியவற்றின் அரச பங்குகளை தனியார் மயப்படுத்துவதன் பின்னணி என்ன? ஜனாதிபதி,அமைச்சரவை மாத்திரம் நாடு அல்ல. ஆகவே கடன் மறுசீரமைப்பு மற்றும் மறுசீரமைக்கப்படும் அரச நிறுவனங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். மக்களின் அபிலாஷை–களை கோர அரசாங்கம் தயார் இல்லை. ஆகவே, நாடாளுமன்றத்தின் ஊடாக உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும். – என்றார்.

# நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலைக்கு அரச அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டும்

## சம்பிக்க கூறுகிறார்



நாடு வங்குரோத்து நிலை அடைந்தமைக்கு அரசியல்வாதிகளை போல் அரச அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ ஆகியோரின் நிதி,பொருளாதாரம் தொடர்பான அறிவின்மையை வியத்மக என்று குறிப்பிட்டுக் கொள்ளும் தரப்பினர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி 55 லட்சத் குடும்பங்களை வறுமை கோட்டுக்கு தள்ளியுள்ளார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள 43 ஆவது படையணி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவி–யலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டின் நிதி தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. நிதி கட்டமைப்பு மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான அதிகாரம் இலங்கை மத்திய வங்கிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. நிதி கொள்கைக்கும் மத்திய வங்கிக்கும் பரபஸ்பர வேறுபாடு நிலகாணப்படுகிறது.

உத்தேச புதிய மத்திய வங்கி சட்டத்தின் ஊடாக மத்திய வங்கியை சுயாதீனப்படுத்துவதாகக் குறிப்பிடப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு நாடு மிக மோசமான பொருளாதாரக் கொள்கையை எதிர்கொண்ட போது மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை தொடர்பில் சாதக மற்றும் பாதகமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மத்திய வங்கியை சுயாதீ–னப்படுத்தும் முயற்சிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. 2003ஆம்ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கத்தில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் சட்டமூலத்தைக் கொண்டு வந்தார், ஆனால் அந்த முயற்சி பெற்றிபெறவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் 2018 ஆம் ஆண்டு சட்டமூலத்தை கொண்டு வந்தார். 2019 ஆம் ஆண்டு அதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டது.

ஆனால் நாடாளுமன்றத்தின் ஊடான நிறைவேற்றப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் வகையில் உத்தேச புதிய மத்திய வங்கி சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கம் நிதி தொடர்பில் எடுத்த தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது.

அரசியல்வாதிகளை காட்டிலும் படித்த துறைசார் நிபுணர்கள் நாட்டை சிறந்த முறையில் நிர்வகிப்பார்கள் என்று குறிப்பிடப்படுகின்றமை தவறு என்பதை இலங்கை எடுத்துக்காட்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஆட்சியமைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு பொருளாதாரம்,நிதி தொடர்பில் படிப்பறிவு கிடையாது. ஆகவே அப்போதைய ஜனாதிபதியின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகிய மூவரும் தான் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகிய மூவரையும் முன்னிலைப்படுத்தி நிதி தொடர்பான தீர்மானங்களை எடுத்து நாட்டை நிர்வகித்தார்கள். பெறுபேறு நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. ஆகவே, அதிகாரிகளால் மாத்திரம் பொருளாதாரத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியும் என்ற தர்க்கம் முறையற்றது. – என்றார்.

# ஆண்டுக்கு 300 மில்லியன் நிதி அரச வளங்கள் பேணச் செலவு



ஆண்டொன்றுக்கு 300 முதல் 400 மில்லியன் வரையில் அரச வளங்களை பாதுகாப்பதற்காக மட்டுமே செலவிடப்படுகின்றது என்று நிதி இராஜங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யப் போகின்றோம் என்று கூறியதுடன் அதனை விற்பனை செய்யப்போவதாக கூச்சலிடுகின்றனர். உண்மையில் அது தவறானதாகும்.

மறுசீரமைப்பில் பல நடைமுறைகள் உள்ளன. பல நிறுவனங்களை ஒன்றிணைக்க முடியும். பங்குச் சந்தை ஊடாக பங்குகளை விற்பனை செய்ய முடியும். முழுமையாகவும் முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்யமுடியும் இவ்வாறு பல நடைமுறைகள் உள்ளன. நிறுவனத்திற்குநிறுவனம் மாறுபட்ட நிலைமைகள் காணப்படுவதால் அவற்றுக்குரிய நடைமுறைகளே பின்பற்றப்படும். நாம் தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக 300 முதல் 400 மில்லியன் ரூபாவை செலவிடுகின்றோம். கல்விக்கான செலவு 600 மில்லியன் ரூபாவாகும்.

இவ்வாறு அரச வளங்களைப் பாதுகாப்பதற்கு நிதியைச் செலவிட்டாலும் அதன் மூலம் அரச வளங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனவா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றார்.

# கால்கோல் விழா



மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவும், கல்வி ஊக்குவிப்பு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் சுதாமதி தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், லண்டனில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவர்களான ஆர்.விஜயரஞ்சினி, எஸ்.நவரஞ்சினி, ஜே.ஸ்ரீரஞ்சினி மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் க.ரஜனிகாந்தன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

தேவைப்பாடுடைய தெரிவு செய்யப்பட்ட இரு மாணவர்களுக்கு துவிச் சக்கரவண்டிகளும், மாணவி ஒருவருக்கு மடிக்கணினியும், 5 மாணவர்களுக்கான மாதாந்த உதவு தொகைகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன், மாணவர்கள் சிலருக்கு புத்தகப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.